பக்கங்கள்:இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 15 வெள்ளிக்கிழமை (30.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 011

WESTERN UNION MONEY TRANSFER உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

## சர்வதேச அரங்கில் இலங்கைக்கு கடும் நெருக்கடி மீள உருவாகும்



### மக்கள் சக்தி அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு சர்வதேச அரங்கில் இலங்கைக்கு கடும நெருக்கடியை ஏற்படுத்தும் என தற்போதைய அரசாங்கத்தை ஆட்சி பீடம் ஏற்றுவதற்கு ஒத்துழைத்த அமைப்புக்களில் ஒன்றான மக்கள் சக்தி அமைப்பு எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து

23ஆம் பக்கம் பார்க்க...

## அம்மா இடத்தில் சின்னம்மா

அ.தி.மு.க தலைமைப் பொறுப்பு சசிகலாவிடம் நேற்று ஒப்படைப்பு



18ஆம் பக்கம் பார்க்க...

# ஆட்சியைக் கவிழ்ப்பதே 2017இல் எனது திட்டம்



### சர்வதேச ஊடகங்களிடம் மகிந்த சபதம்

(கொழும்பு)

தற்போதுள்ள நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்ப்பதே 2017ஆம் ஆண்டில் நான் மேற்கொள்ளும் முக்கிய திட்டம் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக ஆட்சிப் பீடம் ஏறாமலேயே நாட்டை தம்மால் ஆட்சி செய்ய முடியும் எனவும் சூளுரைத்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க...

## 'அரசியலமைப்பை எதிர்ப்போம்'

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய தலைவர்கள், பௌத்தர்கள் அல்லது சிங்களவர்கள் அல்லாதவர்களின் ஆலோசனைக்கு அமைய செயற்படுவதாக தெரிவித்த பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர், நாட்டைப் பிளவுபடுத்தும் புதிய அரசியல் யாப்பிற்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும்

23ஆம் பக்கம் பார்க்க...

## விமல் வீரவன்சவுக்கு மீள அழைப்பாணை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவிற்கு பொலிஸ் நிதிக குற்ற விசாரணை பிரிவில் முன்னிலையாகுமாறு மீண்டும் நேற்று அழைப்பாணை அனுப்பட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க...

## ஆதரவளிக்க முடியாது!

(கொழும்பு)

அரசாங்கம் அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்ளாமல் பொருளாதார விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்துக்கு ஆதரவளிக்க முடியாது என நவ சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

நவ சமசமாஜ கட்சி காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை

24ஆம் பக்கம் பார்க்க...

## குறைபாடுடைய சட்டமூலத்திற்கு அனுமதி பெற நினைத்தது தவறு



### அரசு மீது ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

விசேட அதிகாரங்களை கொண்ட அமைச்சர் ஒருவரை நியமிப்பது தொடர்பிலான சட்டமூலத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றது எனத் தெரிந்தும் அதனை மாகாண சபைகளின் விருப்பத்தை அறிந்து கொள்வதற்காக அனுப்பியது அரசாங்கத்தின் தவறு என ஜாதிக ஹெல உறுமய குற்றம்சாட்டியுள்ளது.

கொழும்பிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து

23ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதி-ஐ.தே.க சந்திப்பு இன்று!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இன்று முக்கிய சந்திப்பொன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்

24ஆம் பக்கம் பார்க்க...

## மைத்திரி-ரணில் நாடகத்தை உடனே நிறுத்த வேண்டும்

### முருத்தொட்டுவே ஆனந்த தேரர் சாடல்

(கொழும்பு)

மைத்திரியும் ரணிலும் மேற்கொண்டு வரும் அரசியல் நாடகத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என தெரிவித்த முருத்தொட்டுவே ஆனந்த தேரர், நாட்டுக்குள் தற்போது விற்பனை செய்ய பொலிஸ் மற்றும் சிறைச்சாலைகள் மாத்திரமே எஞ்சியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின்

23ஆம் பக்கம் பார்க்க...

## முட்டாள் தயாரித்த சட்டமே அபிவிருத்தி விசேட சட்டம்

### அமைச்சர் ராஜித கடும் விசனம்



(கொழும்பு)

இலங்கையின் சட்டத்தை அறியாத ஒருவரே அபிவிருத்திகள் விசேட ஏற்பாடுகள் சட்டமூல வரைபை தயாரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார். சட்ட மூல வரைபை தயாரித்த சட்டவாதி அல்லது நபர் ஒரு முட்டாள் என தான் கூறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க...

# ஜனாதிபதியுடன் விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யாழ்.மாவட்ட விஜயத்தின் போது முப்படைகளிலும் கடமையாற்றி ஓய்வுபெற்று யாழ். மாவட்டத்தில் வசிக்கும் அங்கத்தவர்களை விசேடமாக சந்திக்கவுள்ளார்.

இந்த விசேட சந்திப்பு எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ் பாதுகாப்பு படைகள் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே கடமையில் இருந்து ஓய்வுபெற்ற அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு பாதுகாப்பு படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (செ-9)

# அரசாங்கத்தை கவிழ்க்க மகிந்த பகல் கனவு காண்கின்றார் - கபீர்

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்ப்பது சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பகல கனவு காண்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் கபீர் ஹாசீம்,

ஜனநாயக அரசாங்கத்திற்கு இப்படியான அச்சுறுத்தல் விடுக்கப்படுவதன் மூலம் யார் சூழ்ச்சிக்காரர்கள் என்பது மக்களுக்கு தெரிய வரும் எனவும் கூறியுள்ளார். ஆட்சிக் கவிழ்ப்பு தொடர்பான மகிந்தவின் கருத்துக்கு பதில் தெரிவித்துள்ள அமைச்சர் கபீர் ஹாசீம்,

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இந்த நாட்டில் 10 வருடங்கள் ஆட்சியில் இருந்து, சர்வாதிகாரத்தை முன்னெடுத்து வந்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்புச் சட்டத்தை கொண்டு வந்த ஜே. ஆர்.ஜயவர்தனவை கடுமையாக விமர்சித்து வந்த மகிந்த ராஜபக்ஷ, அதே அரசியல மைப்புச்சட்டத்தில் திருத்தங்களை செய்து தான் மற்றும் தனது குடும்பத்தினரின் அதிகாரங்களை பலப்படுத்திக்கொண்டார்.

மகிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகாரத்தை ஒழித்து நாங்கள் கொண்டு வந்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்ற காலத்தில் இருந்து அதனை கவிழ்க்க இவர்கள் சதித்திட்டம் தீட்டி வருகின்றனர்.

இந்த கோஷ்டியினர் தலைகீழாக நின்றாலும் மக்கள் ஆணையை கொண்டு ஆட்சியை நடத்தி வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தை அவர்கள் பறித்து கொள்ள இடமளிக்க மாட்டோம்.

வெளிநாட்டு ஊடகங்களிடம் மகிந்த ராஜபக்ஷ 2017ஆம் ஆண்டு அரசாங்கத்தை கவிழ்க்கப் போவதாக கூறுவாராயின் யார் சர்வதேச சதியில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் கபீர் ஹசீம் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# கஞ்சாவுடன் கைதான நபருக்கு மறியல்

(கரணவாய்)

வடமராட்சி மாலுசந்திப் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதவான் பி.குமாரசாமி உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த இளைஞரை நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-60)

# மாணவர் அனுமதி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

2016-ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 157ற்கு மேல் புள்ளிகளைப் பெற்று கல்வி அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கான கலந்துரையாடல் நாளை 31-ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல பெற்றோர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு பாடசாலை அதிபர் திருமதி வீ.சண்முகரட்ணம் கேட்டுக்கொள்கின்றார். (செ)

# யாழ்ப்பாணம் மாநகர சபை, 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன் பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகரசபையின் திரு.பொ.வாகீசன், ஆணையாளர் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது,

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு இன் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபை இற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2016 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு /மதிப்பீட்டை 2017 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு / மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனத்தின் மீது குறித்த மதிப்பீட்டுக்கு வருடாந்தப் பெறுமதியில் 6 சதவீதமான (6%) வருடாந்த வீத வரி விதிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2017 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித் தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% திலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% திலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

திரு.பொ.வாகீசன்
யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர்

மேற்படி அட்டவணை

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2017- 31.03.2017 | 31.01.2017 |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2017- 30.06.2017 | 30.04.2017 |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2017- 30.09.2017 | 31.07.2017 |
| நான்காவது காலாண்டு | 01.10.2017- 31.12.2017 | 31.10.2017 |

**குறிப்பு :-** 2017 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகரசபை ஆதனவரிப் பகுதியில் நேரடியாக வந்து தமது ஆதன விபரங்களைத் தெரிவித்து 2017 ஆம் ஆண்டிற்கான ஆதனவரிகளைச் செலுத்த முடியும் என்பதுடன் 31.01. 2017 ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

திரு.பொ.வாகீசன்
ஆணையாளர்

(சி-6912)


# வாடகைக்கு

யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் அரசடிவீதியில் கடைகளும், அதனுடன இணைந்த மூன்று அறைகள் கொண்ட வீடும் முழுமையாகவோ, தனி அறைகளாகவோ உடன் வாடகைக்கு கொடுக்கப்படும் வாடகை பேசித் தீர்மானிக்கலாம். (731)

T.P No: 0779050319



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




30.12.2016

கரவெட்டி, கைதடியைச் சேர்ந்த ஹரிகரன் - தீபா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

செல்வன் ஹரிகரன் தீபக்

தனது 1வது பிறந்தநாளை இன்று 30.12.2016 இல் கொலண்டில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

தீபக்கை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா மற்றும் உறவினர் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

வைரசோதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி

அப்பம்மா - ந.பாலசரஸ்வதி
அம்மம்மா - கி.அருந்தவம்

(சி-6910)

# தமிழரின் சரித்திரம் மாற்றி எழுதப்படுகிறது

## இனத்தின் தொன்மை பற்றி எடுத்தியம்பும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு-யாழ்.பல்கலை.துணைவேந்தர்



(யாழ்ப்பாணம்)

**தமிழர்களின் வரலாறு, சரித்திரங்கள் மாற்றி எழுதப்பட்டு கொண்டிருக்கும் தற்போதைய சூழலில் தமிழர்களின் தொன்மை பற்றி எடுத்தியம்பும் சின்னங்களைக் கண்டுபிடித்து அதனை வெளியுலகிற்கு கூற வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.**

கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்களைப் பார்வையிடலும் தேடல் சஞ்சிகையின் வெளியீட்டு விழாவும் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டத்தின் தலைவர் பொ.வருண்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்பல்கலைக்கழக தொலலியல் ஆய்வு வட்டம், பேராசிரியர்களான புஷ்பரட்ணம், கிருஷ்ணராஜா மற்றும் துணை ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரையும் மிகவும் பாராட்ட வேண்டும். தமிழர்களின் இருப்பை எடுத்துக்காட்டுவது இத்தகைய சான்றுகள் தான். நாங்கள் யார்? எங்கிருந்து வந்தோம்? எப்போது வந்தோம்? எப்படி இருந்தோம்? எப்படி இருக்கின்றோம்? என்பவற்றுக்கு இவ்வாறான தொல்லியல் சின்னங்களே விடையளிக்கின்றன.

இந்தக் கேள்விகள் பல இடங்களில் கேட்கப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் எமது சரித்திரம், வரலாறு மாற்றி எழுதப்படுகின்றன. இவ்வாறான ஒரு இக்கடடான காலப்பகுதியில் கட்டுக்கரை குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த தொன்மையான பொருட்கள் எங்களை யார் என்பதனைக் காட்டி நிற்கின்றது. அந்த வகையிலே பேராசிரியர் புஷ்பரட்ணத்திற்கு உண்மையான நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

இந்த கண்டு பிடிப்புக்கள் போன்ற பல கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ள இறைவனின் ஆசி இருக்க வேண்டும். இவற்றை அழிவடையாமல் ஆவணப்படுத்த வேணடும். வெளி ஆட்களுக்கும் இந்த கண்டுபிடிப்புக்களை பணடைய தமிழரின் சின்னங்களை வெளி ஆட்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இவை தான் மிகமிக முக்கியம். இந்த பொறுப்புக்கள் கலைப்பீடத்திற்கும், யாழ். பல்கலைக்கழகத்திற்கும் உரியதாகவும் இந்தப் பணிகள் பெரிதளவில் காணப்படுகின்ற போதிலும் அவற்றை தொடர்ந்து செய்ய வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. இவ்வாறான முயற்சிகளுக்கு எமது பல்கலைக்கழக நிர்வாகம் இயலுமான உதவிகளை புரிந்து வந்துள்ளது. உதவிகள் தொடர்ந்தும் செய்யப்பட வேணடும் என்பது எனது வேண்டுகோள். இவை தான் எமது அடிப்படை தேவை. ஒரு பல்கலைக்கழகத்தில் செய்யப்படுகின்ற ஆராய்ச்சிகள் மிகமிக முக்கியம்.

அதுவும் இவ்வாறான ஆராய்ச்சிகள் எந்தளவிற்கு முக்கியம் என்பது அனைவருக்கும் தெரியும். இதன் முக்கியத்துவத்தை வெளியில் உள்ளவர்களும் அறிந்து கொள்ள வேண்டும். இந்த துறையினரால் வெளியிடப்படும் தேடல் சஞ்சிகையானது எட்டு வருடங்களின் பின்னர் வெளி வருகின்றது. எட்டு வருடங்களோடு தேடல் முடிந்து விடக்கூடாது.

ஒவ்வொரு வருடமும் இந்த தேடல் வெளிவர வேண்டும். இந்த மிக முக்கிய நிகழ்ச்சிகள் தொடர்ந்தும் நடத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

கழிவு அகற்ற பணம் பெறுபவர்கள் தொடர்பில்

## முறைப்படி முறைப்பாடு வந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

கழிவுகளை அகற்றுவதற்கு பொதுமக்களிடம்பணம்பெறுபவர்கள் தொடர்பில் முறைப்படி முறைப்பாடுகள் தரும் பட்சத்தில் அவர்களுக் கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் கழிவுகளை தரம்பிரித்து வைக்க வேண்டும் என பலமுறை தெரிவித்து வருகிறோம். ஆனால் தறபொழுதும் வீதிகளில் கொட்டப்படும் கழிவுகள் தரம் பிரிப்பதில்லை. அவ்வாறான கழிவுகளை தரம்பிரித்து ஏற்றுவது எளிதான செயற்பாடு இல்லை. எனவே தான் மாநகரசபை சுத்திகரிப்பு ஊழியர்களிடம் கலப்பு திண்மக் கழிவுகளை ஏற்றவேண்டாம் என கண்டிப்பாக கூறியுள்ளோம்.

வீதிகளில் கழிவுகள் வீசுவதற்கு ஆயிரம் ரூபாய் தண்டம் அறவிடப்படுகிறது. குறிப்பிட்ட சில மாதங்களில் 40 பேருக்கு எதிராக தண்டம் அறவிட்டுள்ளோம்.

தரம்பிரிக்கப்பட்ட கழிவுகளை வீடுகளில் ஏற்றும் போது பணம் கேட்பவர்கள் தொடர்பில் நாம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அது கையூட்டாக அமையும்.எனவே இவ்விடயம் தொடர்பில் முறைப்படி முறைப பாடுகளை எமக்கு தரும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கைது செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் 25 பேருக்கும் பிணை

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜ.ம.சு.முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் உள்ளிட்ட 25பேரை பிணையில் செல்ல நீர்கொழும்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதுதொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மேல் மாகாண சபை உறுப்பினர்களான ஆனந்த ஹரிசந்திர மற்றும் லலந்த குணசேகர ஆகியோரே குற்றம் சாட்டப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சி

### டலஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

எல்லை நிர்ணயம் தொடர்பிலான பிரச்சினைகளை காரணம் காட்டி அரசாங்கம் இவ்வாறு தேர்தலை காலம் தாழ்த்தி வருவதாக கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் தேவைகளுக்காக எல்லை நிர்ணயக் குழுவினர் தமது நடவடிக்கைகளை மாற்றியமைத்துக் கொள்ளக் கூடாது என கோரியுள்ள அவர் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு ஆளும் கட்சியின் அரசியல் வாதிகள் திட்டமிட்ட வகையில் இந்த அறிக்கையை பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார். (இ-3)

## அன்பளிப்புப் பெற ஆணைக்குழு தடை

அரச சேவையை பொதுவாகவும் சமத்துவமாகவும் வழங்கும் நோக்கில் அரச அதிகாரிகள் அன்பளிப்புப் பொருட்கள் பெறுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.இது தொடர்பிலான அறிவித்தலை பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் வியாபார நிறுவனங்கள் அரச அதிகாரிகளை கவருவதற்காக அன்பளிப்புப் பொருட்களை வழக்கமாக வழங்கி வருகின்றன.

இதன் காரணமாக பொது மக்கள் மத்தியில் அரச அதிகாரிகள் சம்பந்தமாக தவறான எண்ணங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (இ-3)

## இலங்கையுடனான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும்

### தமிழக முதலமைச்சர் வலியுறுத்து



கச்சதீவை மீட்க இலங்கையுடனான ஒப்பந்தத்தை இரத்து செய்ய இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்மண்டல கவுனசில் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் உரை வாசிக்கப்பட்டது.

கேரள மாநிலம் திரு வனந்தபுரத்தில் 27 ஆவது தென் மண்டல கவுன்சில் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. கூட்டத்தில் பன்னீர்செல்வத்தின் உரையைஅமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் வாசித்தார்.

குறித்த உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜெயலலிதாவின் மறைவுக்கு உங்களில் பலர் வருத்தமும் ஆறுதலும் தெரிவித்து இருந்தனர். அதற்கு நன்றி.

பாக்கு நீரிணைப் பகுதியில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டும. இலங்கை சிறையில் அடைகக்கப்பட்டுள்ள 51 தமிழக மீனவர்களையும் 114 படகுகள் மற்றும் உபகரணங்களையும் விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கச்சதீவை மீட்க 1974 ஆம் ஆண்டு இலங்கையுடன் போடப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.(இ-3)

## மலேசியாவிற்கான புதிய உயர்ஸ்தானிகராக முஸம்மில்

(கொழும்பு)

மலேசியாவிற்கான புதிய உயர்ஸ்தானிகர் பதவியை பொறுப்பேற்றுக் கொள்ள ஏ.ஜே.எம்.முஸம்மில் சம்மதம் தெரிவித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக தனது பதவியை பொறுப்பேற்றுக் கொள்வார் என கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மலேசியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் இப்ராஹிம் அன்ஸாரிற்கு பதிலாகவே முஸம்மில் உயர்ஸ்தானிகர் பதவியை பொறுப்பேற்கவுள்ளார்.

மேலும் மலேசியா கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மகிந்த ராஜபக்ஷவின் எதிர்ப்பாளர்களால் மலேசியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் இப்ராஹிம் அன்சார், கடந்த செப்டெம்பர் மாதம் தாக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# ஆஸி - பாகிஸ்தான் டெஸ்ட் சமநிலையை நோக்கி நகர்வு

## ஸ்மித் அபார சதம்

மெல்போர்ன் டெஸ்டில் ஸ்மித்தின் சதத்தால் அவுஸ்திரேலியா முன்னிலை பெற்றுள்ளது. தற்போது வரை அவுஸ்திரேலியா 22 ஓட்டங்கள் முன்னிலைப் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா – பாகிஸ்தான் அணிகள் மோதும் 2வது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் நடந்து வருகிறது. பாகிஸ்தான் முதல் இனிங்சில் 9 விக்கெட்டுக்கு 443 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர் முதல் இனிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா டேவிட் வோனரின் 144 ஓட்டங்கள் குவிப்பால், 3ம் நாள் முடிவில் 2 விக்கெட்டுக்கு 278 ஓட்டங்களை எடுத்து இருந்தது. கவாஜா 95 ஓட்டங்களுடனும், ஸ்மித் 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 4ம் நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து விளையாடிய உஸ்மான் கவாஜா 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். அடுத்து வந்த பீட்டர் ஹேண்ட்ஸ்காம்ப் 54 ஓட்டங்களிலும், மேடிசன் 22 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். வாடே 9 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

ஆனால் ஸ்மித் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். இது அவரது 17வது சதமாகும். அவுஸ்திரேலியா 113.5 பந்துப்பரிமாற்றங்களில் 6 விக்கெட்டுக்கு 465 ஓட்டங்களை எடுத்திருந்த போது மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அத்துடன் 4வது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

தற்போது வரை அவுஸ்திரேலியா 22 ஓட்டங்கள் மட்டுமே முன்னிலை பெற்றுள்ளது. இன்று கடைசி நாள்



ஆட்டத்தில் மதிய உணவு இடைவேளை வரை அவுஸ்திரேலியா அதிரடியாக விளையாடி 250 ஓட்டங்கள் முன்னிலைப் பெற்று, பாகிஸ்தான் அணியை பட்டிங் செய்ய வைக்க வாய்ப்புள்ளது.

இன்று ஒருநாள் மட்டுமே இருப்பதால் போட்டி சமநிலையில் முடிய வாய்ப்புள்ளது. (க)

# பிரிமியர் பட்மிண்டன் லீக் போட்டி சென்னைக்காக களமிறங்கும் சிந்து

2ஆவது பிரிமீயர் பட்மிண்டன் லீக் (பி.பி.எல்.) திருவிழா எதிர்வரும் முதலாம்திகதிமுதல்14ஆம்திகதி வரை இந்தியாவில் நடக்கிறது.

இதில் சென்னை ஸ்மாஷர்ஸ், ஐதராபாத் ஹண்டர்ஸ், பெங்களூர் பிளாஸ்டர்ஸ், டெல்லி ஏசர்ஸ், லக்னோ அவாத் வாரியர்ஸ், மும்பை ராக்கெட்ஸ் ஆகிய 6 அணிகள் பங்கேற்கின்றன.

ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற 8 பேர் உட்பட மொத்தம் 60 வீரர், வீராங்கனைகள் மட்டையை சுழற்ற காத்திருக்கிறார்கள்.

இதற்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி ஐதராபாத்தில் ஜனவரி முதலாம் திகதி நடக்கும் முதல் லீக்கில் சென்னை ஸ்மாஷர்சும், ஐதராபாத் ஹன்டர்சும் மோதுகின்றன. சென்னை அணியில் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய நட்சத்திர வீராங்கனை பி.வி.சிந்துவும், ஐதராபாத் அணியில் ஒலிம்பிக் சம்பியன் ஸ்பெயினின் கரோலினா மரினும் அங்கம் வகிக்கிறார்கள். முதல் ஆட்டத்தில் இருவரும் நேருக்கு நேர் மல்லுகட்ட இருக்கிறார்கள்.

அதே நாளில் நடக்கும் மற்றொரு ஆட்டத்தில் பெங்களூர் பிளாஸ்டர்ஸ் - டெல்லி ஏசர்ஸ் அணிகள் மோதுகின்றன. மொத்தம் 18 ஆட்டங்கள் 5 நகரங்களில் நடக்கின்றன. இறுதிப்போட்டி டில்லியில் அரங்கேறுகிறது.

இந்த போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.6 கோடியாகும். சம்பியன் பட்டத்தை வெல்லும் அணிக்கு ரூ.3 கோடியும். 2ஆவது இடத்தை பிடிக்கும் அணிக்கு ரூ. ஒரு கோடியும் பரிசாக வழங்கப்படும்.

முக்கியமான அணியாக சென்னை ஸ்மாஷர்ஸ் கவனிக்கப்பட்டாலும், இந்த முறையும் சென்னையில் போட்டி இல்லாதது ரசிகர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

# போராடுகின்றது இலங்கை



தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ரின் நான்காம் நாள் ஆட்ட நேரமுடிவில் இலங்கை அணி 5 விக்கெட்டினை இழந்து போராட்டத்தினை வெளிப்படுத்தி வருகின்றது.

இலங்கை - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் நடைபெற்று வருகிறது. நாணய சுழற்ச்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்த தென்ஆப்பிரிக்கா முதல் இனிங்சில் 286 ஓட்டங்களில் சுருண்டது.

பன்னர் விளையாடிய இலங்கை அணி முதல் இன்னிங்சில் 205 ஓட்டங்களில் சரணடைந்தது. 81 ஓட்டங்கள் முன்னிலையுடன் தெனாப்பிரிக்கா அணி 2-வது இனிங்சை தொடங்கியது.

அந்த அணி 3-வது நாள் ஆட்ட முடிவில் ஸ்டீபன் குக்கின் (117) சதத்தால் 5 விக்கெட் இழப்பிற்கு 351 ஓட்டங்கள் குவித்திருந்தது. டு பிளிசிஸ் 41 ஓட்டங்களுடனும், டி காக் 42 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 4-வது நாள் ஆட்டம் தொடங்கியது. நேற்று ஆட்டத்தை தொடங்கிய இருவரும் அரைசதம் அடித்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 406 ஓட்டமாக இருக்கும் போது டிக் 69 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். இத்துடன் தென்னாபிரிக்கா 2-வது இன்னிங்சை நிறுத்துவதாக அறிவித்தது. டு பிளிசிஸ் 67 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

முதல் இன்னிங்சில் தென்னாபரிக்கா 81 ஓட்டங்கள் முன்னிலைப் பெற்றிருந்ததால் ஒட்டு மொத்தமாக இலங்கையை விட 487 ஓட்டங்கள அதிகம் பெற்றது.

இதனால் இலங்கை அணியின் வெற்றிக்கு 488 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 488 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2-வது இன்னிங்சை தொடங்கியுள்ளது.


இலங்கை அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேரமுடிவில் 5 விக்கெட் இழப்பிற்க்கு 240 ஓட்டங்கள் பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்கள் பெற்றுள்ளார்.

போட்டியின் இறுதியும் 5வது நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# புரூபின் சதத்தின் துணையுடன் பங்களாதேஷை வென்றது நியூசிலாந்து







பங்களாதேஷ் மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து அணி 67 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 251 ஓட்டங்களை பெற்றது.

நியூஸிலாந்து அணி சார்பில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய புரூம் 109 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் மஷ்ரபீ மூர்தஷா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 42.4 ஓவர்கள் நிறைவில் 184 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் வில்லியம்ஸன் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். போட்டியின் சிறப்பாட்டக்காரராக நியூஸிலாந்து அணியின் புரூம் தெரிவுசெய்யப்பட்டார்.

# அவுஸ்திரேலியா கனவு அணி தலைவரானார் விராட் ஹோலி



ஐ.சி.சி. வெளியிட்ட இந்த ஆண்டுக்கான கனவு டெஸ்ட் அணியில் இந்திய அணித்தலைர் விராட் ஹோலி தேர்வாகவில்லை. இது சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆனால ஐ.சி.சி. ஒரு நாள் போட்டி அணிக்கு தலைவராக ஹோலி தேர்வானார்.

இந்த நிலையில் அவுஸ்திரேலய கிரிக்கெட் வாரியம் வெளியிட்ட டெஸ்ட் கனவு அணிக்கு விராட் ஹோலியை தலைவராக தேர்ந்தெடுத்தது. தற்போது அவுஸ்திரேலய கிரிக்கெட் வாரியம், ஒருநாள் போடடி கனவு அணியை வெளியிட்டுள்ளது.

இந்த அணிக்கும் ஹோலியை தலைவராக நியமித்துள்ளது. இந்திய வேகப்பந்து வீரர் ஜஸ்பிரித் பும்ரா இடம் பெற்றுள்ளார். அந்த அணி விபரம், ஹோலி (அணித் தலைவர்), டேவிட் வோர்னர், குயின்டன் டி.காக், ஸ்டீவன் சுமித், பாபர் அசம், மிட்செல் மார்ஷ், ஜோஸ்பட்லர், ஜஸ்பிரீத் பும்ரா, இம்ரான் தாகீர்.

# மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

சுன்னாகம் சிவன் கழகத்தினால் நடாத்தப்படும் மென்பந்துச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 8 பேர் 5 பந்துப் பரிமாற்றம் கொண்ட போட்டியானது நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் மைதானத்தில் நடைபெறவுள்ளது

போட்டி கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படுவதோடு 28 வயதுக்குட்பட்டோரே மேற்படி போட்டியில் பங்கு பற்ற முடியும்.

தொடர்புக்கு - 0773093483
0766852489

# BLOSSOMS ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பயிற்சி நிலைய ஆரம்பவிழா

(யாழ்ப்பாணம்)

ஆறுதல் நிறுவனத்தில் BLOOSSOMS ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பயிற்சி நிலைய ஆரம்ப விழா எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இல. 189. ஸ்ரேசன் வீதி. கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில் எனும் முகவரியில் இடம்பெறும்.

ஆறுதல் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன். கௌரவ விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி. வடமாகாண ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் செல்வி. த.ஜெயக்குமாரி. சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# வல்வெட்டித்துறை இலக்கிய மன்றம் நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை

வல்வெட்டித்துறை கலை.கலாசார இலக்கிய மன்றம் நடத்தும் 7 ஆவது மாபெரும் கலை இலக்கியப் பெருவிழா நாளை மறுதினம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முத்துமாரியம்மன் ஆலய தெற்கு வீதியில் இடம்பெறும்.


கலை. கலாசார இலக்கிய மன்றத் தலைவர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன். வலம்புரி பத்திரிகையின் முகாமையாளர் மாவை. நா.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கலைஞர் கௌரவிப்பினை வடமாகாண முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் நடராஜா அனந்தராஜ். "நெய்தல்" இதழ் சிறப்பு பிரதியை இலங்கை வங்கியின் இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரெட்ணம் (எழுத்தாளர்) ஆகியோர் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

ஓம் கணபதி ஓம்

# அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வத் திருநாள் தங்கள் திருவடி வணங்கிய வாழ்த்துக்கள்

## 30.12.2016



(7309)

அமரர்

திரு.சின்னையா நாகலிங்கம்

மண்ணகம் 21.06.1930 விண்ணகம் 20.03.1996

நற்கிழவிதோட்டம் மகா கணபதிப் பிள்ளையார்
எந்நிதியும் தருவான் செல்வச்சந்நிதியான் முருகன்
சந்நிதிகளில் தசாப்த கால துதி பாடி வணங்கிய
தவப்பயனாய் நல்லருள் பெற்று நற்குண நாகலிங்கம்
தெய்வானை தெய்வங்களாக நல்லறிவுடன்
பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் நமக்களித்து
நற்பிள்ளையாய் சீரும் சிறப்புமாய் நற்பூமிக்காய்
நல் மக்களுக்காய் நற்கோவில் தெய்வ தரிசனை
தொண்டுகளாய் நற்பணியாற்றிடவே உங்களுயிர்
உதிரத்தால் எனை உருவாக்கி உதிக்க வைத்த
அறுபதாவது திருநாள் உங்கள் திருநாளில்
தில்லை நடராசன் திருவடி சேர்ந்தாலும் எங்களுயிர்
அம்மாவே ஐயாவே என் இதயக்கோவிலில்
தெய்வங்களாக்கி நிதம் நிதம் நினைந்துருகி
என் இருகரம் தூக்கி சிரம் தாழ்த்தி என்
உதிரத்தால் கண்ணீர் சொரிந்து தங்களின்
திருவடிகளை வணங்கி வாழ்த்துவதுடன்
என்னுயிர் ஐயாவே அம்மாவே நின்தாள்கள்
பணிந்து நிரந்தரமாய் நற்பணியாற்றிடவே
நல்லாசி வழங்கி அழைத்திடுவீர் ஐயாவே அம்மாவே

அன்பேசிவம் அன்பேசிவம் அன்பேசிவம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



அமரர்

திருமதி நாகலிங்கம் தெய்வானை

மண்ணகம் 10.06.1932 விண்ணகம் 30.05.2009

கிழவிதோட்டம்
கரவெட்டி கிழக்கு
கரவெட்டி.

நா.சற்குணநாதன்
சிவத்தொண்டர்
சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்
முகாமைத்துவ உதவியாளர்
பனை அபிவிருத்திச் சபை யாழ்ப்பாணம்.

# இராசி பலன்

30.12.2016

(மார்கழி 15, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
பிரதமை பிற்பகல் 2.24 மணிவரை
பூராடம் பின்னிரவு 2.03 மணிவரை
சுபநேரம் 6.29-7.59 மணிவரை
இராகுகாலம் 10.59-12.29 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் சுக் | கிரகநிலை சந்திராஷ்டமம் | | |
| | மிருகசீரிடம். திருவாதிரை இரவு 8.02 மணிக்கு மகர- சந் | | ராகு |
| சூரி சந் | சனி புதன் | | குரு |

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங் கும், நண்பர்கள் உதவ முன் வரலாம், ஆரோக்கியமான நாள், புதிய பொருட் சேர்க் கையுண்டு, போசன சுகமு ண்டு.

**மேடம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**இடபம்:** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், தேகநல னில் கவனம் தேவை, குடும் பப் பெரியவர்களின் ஆலோ சனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**மிதுனம்:** நண்பர்களால் ஒருசில நன் மைகள் ஏற்படும், ஆசைப் பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும் பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்:** காரிய அனுகூலமுண்டு, சம யோசிதப் புத்தியால் பலரை யும் கவர்வீர்கள், தொலை பேசி வழியில் சுப தகவல் கள் வந்து சேரலாம், வருமா னம் திருப்தி தரும்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பழைய கடன்களை அடை க்க புதிய வழியைக் கையா ள்வீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**மகரம்:** வீட்டுத் தேவைகளைப பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழி பாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தனவிரய முண்டு.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் கைகூ டும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு:** சிந்தனை மிகுதியான நாள், சொன்ன சொல்லைக் காப் பாற்ற துடிப்போடு செயற் படுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழி பட வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் தித்திக்க வைக் கும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வாக்கு மேன் மையுண்டு.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், செய்தொழில் மேன்மை யுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள் வர், சுப செலவுகள் கூடும்.

## ஆயிரம் மில்லியன் ரூபா அரசால் ஒதுக்கீடு

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைச் சூழலில் சிறுவர் வைத்தியசாலை அமைக்க காணி வேண்டும்

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சூழலில் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு காணியினை தந்துதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ். சத்தியமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் வடமாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கிழக்கு மாகாணத்திலும் தென்பகுதியிலும் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு தலா ஆயிரம் மில்லியன் ரூபா நிதி அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவர் வைத்தியசாலையானது மாகாணத்திலுள்ள போதனா வைத்தியசாலையுடன் இணைந்ததாகவே அமைக்கப்படவேண்டியதேவை இருப்பதால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையாக இவ் வைத்தியசாலை அமையவுள்ளது.

இதற்காக போதனா வைத்தியசாலை சுற்றாடலில் அண்ணளவாக 1.5 ஏக்கர் பரப்பளவான காணி தேவையாக உள்ளது. யாழ். போதனா வைத்தியசாலை சுற்றாடலிலும் நகர்ப்பகுதியிலும் வடக்கின் அனைத்துப் பகுதிமக்களும் இலகுவில் போக்குவரத்து செய்யக் கூடியவாறு மத்திய பகுதியில் காணி உள்ளவர்கள் அல்லது நன்கொடையாளர்கள் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு காணி தந்துதவ முன்வர வேண்டும்.

இன்னும் சில மாதங்களில் இப்பணிக்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்படாதவிடத்து இந்நிதியானது வேறுபகுதிக்கு திருப்பப்படும். சாத்தியமுள்ளது. மேலும் அடுத்த ஆண்டு இந்நிதி வடபகுதிக்கு ஒதுக்கப்பட வாய்ப்பு இல்லை. தற்போது காலியில் சிறுவர் வைத்தியசாலை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

மேலும் இலங்கையில் தற்போது கொழும்பிலும் கண்டியிலும் மாத்திரமே சிறுவர்களுக்கான நவீன வசதிகளைக் கொண்ட வைத்தியசாலை அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)




## ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு







மீள புதுப்பிக்கப்பட்ட பாசையூர் ஆரம்ப சுகாதார மகப்பேற்று நிலையம் திறப்பு விழா நிகழ்வும் மழலைகளுக்கான விளையாட்டு திடல் திறப்பு விழாவும் நேற்றுமுன்தினம் யாழ். கடற்கரை வீதி பாஷையூரில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மகப்பேற்று நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜன் Lanka IOC PLC நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குநர் சியாம் போறா, யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன், வைத்திய அதிகாரிகள், திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

# பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இளம் சமூகத்தினர் மருத்துவக் கற்கையை ஆர்வத்துடன் கற்க வேண்டும்

## யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் அறிவுரை

வடக்கில் உள்ள வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இங்குள்ள இளம் சமுதாயத்தினர் மருத்துவ கற்கையை ஆர்வத்துடன் கற்க வேண்டும் என தெரிவித்த யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன், மருத்துவக்கற்கையில் ஆர்வம் உள்ள மாணவர்களுக்கான சகல உதவிகளையும் வழங்க இந்திய அரசு தயாராக உள்ளதெனவும் தெரிவித்தார்.

மீள புதுப்பிக்கப்பட்ட பாசையூர் ஆரம்ப சுகாதார மகப்பேற்று நிலைய திறப்புவிழா நிகழ்வு நேற்று முன்தினம் பாசையூர் மகப்பேற்று நிலையத்தில் நடைபெற்றது. அதில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

போரின் போது வடக்கில் எவ்வாறான நிலை இருந்து வந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் தற்போது தொடர்ச்சியான முன்னேற்றம், அபிவிருத்தி, சுகாதாரம் போன்றவை மேம்பட்டு வருகிறது.

நாங்கள் அதிக நாட்கள் வாழ்வதற்கு சுகாதாரமே முக்கியமானது. வடக்கில் திறமையான மற்றும் கடினமாக உழைக்கு வைத்தியர்கள் பலர் உள்ளனர். அதே போன்று மருத்துவ வசதிகளும் அதிகரித்து வருவதால் எம்மால் சுகாதாரமாக வாழ முடிகிறது.


இந்திய அரசாங்கத்தால் வவுனியா மாவட்டத்தில் அரச வைத்தியசாலையில் ஒரு பகுதியில் கட்டடம் அமைத்து மருத்துவ உபகரணங்கள் வழுங்கவுள்ளோம். மலையகத்திலும் வைத்தியசாலை அமைக்கவுள்ளோம்.

இலங்கை அரசுக்கு இந்திய அரசு நோயாளர் காவு வண்டிகள் பலவற்றை அன்பளிப்பு செய்துள்ளது. இருப்பினும். வடமாகாணத்தை பொறுத்தவரையில் வைத்தியர் பற்றாக்குறையாக உள்ளதை எம்மால் உணர முடிகிறது.

இந்த் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு வருங்கால இளைய சமுதாயம் மருத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து கற்க வேண்டும். மருத்துவ கற்கைளை கற்பதற்கு ஏராள மாணவர்களுக்கு ஆர்வம் உள்ளது. அவர்களுக்கான உதவிகளை வழங்கவும் நாம் தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



2016 தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இலங்கை வங்கி யாழ்ப்பாணம் இரண்டாம் மேற்தரக்கிளையில் நடைபெற்றது.நிகழ்வுக்கு இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் எம்.கே.பிரபாகரன் மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் ஜி.சகாதேவன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். உதவிப் பொது முகாமையாளர் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்குவதனை படத்தில் காணலாம்.







ஆசை அண்ணாவின் அன்புக்கனவுகள் என்ற சமூக சேவை அமைப்பின் ஊடாக பெண்களுக்கான வாழ்வாதார உதவிகள் நேற்று முன்தினம் தும்பளை பகுதியில் உள்ள அவ் அமைப்பின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. இதில் அப்பகுதியை சேர்ந்த 4 பெண்களுக்கு தையல் இயந்திரங்களும் 136 பெண்களுக்கு உலர்உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டன. (படங்கள்:-பொ.சோபிகா)

# அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம்; ஜனாதிபதியிடம் சீனத் தூதுவர் கவலை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் ஜி ஷியாங்லியாங் நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவசரமாகச் சந்தித்து, அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு குறித்து எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக கவலை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் உடன்பாடு விடயத்தில் இரகசிய தரகு இடம்பெற்றிருப்பதாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி., கூட்டு எதிரணியைச் சேர்ந்தவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து சீனா அதிருப்தி அடைந்துள்ளது.

குறிப்பாக, அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள ஜாதிக ஹெல உறுமய, அம்பாந்தோட்டை உடன்பாட்டுடன் தொடர்புடைய சில அமைச்சர்கள், சீனாவுக்குச் சென்று தரகுப் பணம் பெற்றதாக சுமத்தியுள்ள குற்றச்சாட்டை முன்வைத்திருப்பது தொடர்பான சீனாவின் கவலையை ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்துள்ளார் சீனத் தூதுவர் ஜி ஷியாங் லியாங். (இ-3)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியா: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:- 13, ஆதன இல:- 60, வீதி:- அரசடி ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு:- J/141 சண்டிலிப்பாய் வடக்கு

வட்டாரம் 13, அரசடி ஒழுங்கை, ஆதன இல. 60 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை "திண்ணாதிட்டி" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 1/2 கொண்ட இவ்வாதனம் சண்டிலிப்பாய், வடக்கைச் சேர்ந்த கந்தையா நடராசா, கந்தன்தேவராசா பெண் வசந்திரா ஆகிய இவர்களால் செல்வரத்தினம் விஜயன் பெண் சுரேகா அவர்களுக்கு சீதன உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.என். தம்பிமுத்தன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 5390 ஆம் இலக்க 28.01.2006 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர்.

நில அளவையாளர் திரு. S.பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2016/1/271 ஆம் இலக்க 2016.11.06 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "திண்ணாதிட்டி" நிலப் பரப்பு 01 குளி 10.85 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வரத்தனம் விஜயன் பெண் சுரேகா என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். (7216)

செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## முன்னாள் பிரதமருக்கு பிரதமர் மோடி இரங்கல்

மறைந்த முன்னாள் பிரதமர் ரத்ணசிறி விக்ரமநாயக்கவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். ரத்ணசிறி விக்ரமநாயக்கவின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு அனுதாபத்தையும் இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் பிரதமர் ரத்ணசிறி விக்ரமநாயக்க தனது 83 ஆவது வயதில் காலமானார்.

சுகயீனம் காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து முன்னாள் பிரதமர் காலமானார்.

முன்னாள் பிரதமர் ரத்ணசிறி விக்ரமநாயக்கவின் இறுதிக் கிரியைகள் நாளை 31 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## முக்கிய அறிவித்தல்
## அவசர கலந்துரையாடல்

*29.01.2017 அன்று யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ள வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தொடர்பாக கலந்துரையாட வேண்டி உள்ளதால் 15.02.2015 இற்கு பின்பும் 11.09.2016 இற்கு முன்பும் சித்தியடைந்த மாணவர்களை அழைக்கின்றோம்.*

இடம்:- நாவலர் கலாசார மண்டபம்
காலம்:- 31.12.2016 (சனிக்கிழமை)
நேரம்:- முற்பகல் 9.00 மணி

**வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(சி-6911)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:- 13, ஆதன இல:- 60A, வீதி:- அரசடி ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு:- J/141 சண்டிலிப்பாய் வடக்கு

வட்டாரம் 13, அரசடி ஒழுங்கை, ஆதன இல. 60A இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை "என்பிலானையும் இம்புலானும்" என்னும்பெயருள்ள நிலப்பரப்பு 01குளி 11.41கொண்ட இவ்வாதனம் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த குகேந்திரன் லம்போதரன் ஆகிய இவர்களால் காளி கோவிலடி தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா இராசேந்திரம் பெண் புவனேஸ்வரி அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.பொ.சுந்தரலிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 4188 ஆம் இலக்க 20.10.2013 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர்.

நில அளவையாளர் திரு. S.மகாலிங்கம் அவர்களால் வரையப்பட்ட 1338 ஆம் இல்க்க 12.10.2013 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "என்பிலானையும் இம்புலானும்" நிலப் பரப்பு 01 குளி 11.41 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா இராசேந்திரம் பெண் புவனேஸ்வரி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். (7302)

செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## ஆந்திர முதல்வரின் இலங்.வருகை உறுதி

ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன பதவியேற்று இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திர பாபு நாயுடு இலங்கை வரவுள்ளார் என்பதை இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் உறுதி செயதார்.

தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் மாநிலம் என்ற அடிப்படையில் பிராந்தியத்தை வெற்றி பெறச் செய்தவர்என்றபெருமை ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுக்கே பொருந்தும். இவர் சுற்றாடலுடன் மிகவும் நெருங்கியவர் என்பதனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவருடன பலதரப்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதியின் தொடர்ச்சியான பதவிக் காலத்தில் உள்நாட்டின் விவசாயத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்தப்படவுள்ளது. எனவே இந்தியாவை இவ்விடயத்தில் முன்மாதிரியாக கொண்டு எதிர்காலத்தில் செயற்படவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:-14, ஆதன இல:-76A, வீதி:-கல்வளை வீதி
கிராம சேவையாளர் பிரிவு:-J/142 சண்டிலிப்பாய்

வட்டாரம் 14,கல்வளை வீதி,ஆதன இல.76A இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம்,வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை "சாத்தாவளை" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 கொண்ட இவ்வாதனம் சண்டிலிப்பாய்,கல்வளை வீதியைச் சேர்ந்த சின்னராசா பாலச்சந்திரன் பெண் கல்யாணி ஆகிய இவர்களால் சிறிகாந் பெண் சுகந்தி அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.பொ.சுந்தரலிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 4428 ஆம் இலக்க 24.08.2014 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர்.நில அளவையாளர் திரு.A.கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 2016/5/9ஆம் இலக்க 2016.11.12 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "சாத்தாவளை" நிலப்பரப்பு குளி 16.63 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிறிகாந் பெண் சுகந்தி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

(7303) செயலாளர்,வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 47செவ் 1 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L/வியாபாரம்
தொ.இ: B/6692

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L
கனடா NOT PR
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: B/6693

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 15 செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:ITகனடா
தொ.இ: B/6695

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 28
தகைமை/தொழில்:O/L/சாரதி
டோகா
தொ.இ: B/6696

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 16 செவ் 2 இல்
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/3350

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 26
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/3355

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 12
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்
தொ.இ: G/3380

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 20 சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி/உதவி விரிவுரையாளர்
தொ.இ: G/3388

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

# போதியளவு மழைவீழ்ச்சி இன்மையால் நெற்செய்கை பாதிப்படையும் நிலையில்

## வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

இந்த வருடம் நாட்டில் ஏற்பட்டுள்ள மிகக் குறைந்த மழை வீழ்ச்சி காரணமாக நெல் உற்பத்தி பாரிய ஒரு வீழ்ச்சியை சந்திக்கவுள்ளது. இதேவேளை தொடர்ந்தும் மழைவீழ்ச்சி குறைவடையவுள்ளதுடன் வறட்சியான நிலை ஏற்படும் அபாயம் உள்ளது என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இதுபோன்ற அசாதாரண காலநிலை காரணமாக இந்தியா, மியன்மார், இந்தோனேசியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் நெற்செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஏனையநாடுகளைப்போன்றே எமது நாட்டிலும் இவ்வருடத்தில் நெற்செய்கையானது பெரியளவில் அழிவினை சந் திக்கவுள்ளது என வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவ சாயப் பணிப்பாளர் (விரி) தெ. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

காலபோக மழைவீழ்சசி

வவுனியா மாவட்டத்தில் வழமையாக கடந்த காலபோகங்களில் கிடைக்கும் மழை வீழ்ச்சியில் 30மூ - 40மூ மழை வீழ்ச்சியே இக்கால போகத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது.

**குறைந்தளவு மழை வீழ்ச்சியின் விளைவுகள்**

குளங்களில் போதியளவு நீர் சேமிக்கப்பட்டிருக்கவில்லை (20மூ - 30மூ நீர் சேமிப்பு)

நெற்செய்கைக்கு ஒரு தடவை அல்லது இருதடவை மட்டுமே நீர்ப்பாசனம் செய்யக்கூடிய அளவில் நீர் காணப்படுகின்றது.

களைநாசினி மற்றும் பசளைப் பாவனை செய்வதற்கு ஏற்ற வகையில் நீர் வழங்கல் செய்யமுடியாதநிலை.

களைகளின் ஆதிக்கம் உச்சளவில் காணப்படுகின்றது. சில குளங்களின் கீழ் நெற்செய்கை மேற்கொள்வதற்கு போதியளவு நீர் இன்மை

உதாரணமாக இராஜேந்திரகுளம், சேமமடுக்குளம்ஆகும்

பயிர்கள் அதன் வயதுக்கும் அதன் வளர்ச்சி அவத்தைக்கும் ஏற்ப வளர்ச்சிகாணப்படாமை

எதிர்பார்க்கப்பட்ட விளைவினைப் பெறமுடியாது.

தற்போது மானாவாரி நெற செய்கை முற்றுமுழுதாக கை விடப்பட்டுள்ளது. குளங்களின் கீழான நெற்செய்கையை காப்பாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் பகுதியளவேனும் விளைச்சலை பெறுவதுடன் அடுத்துவரும் போகத்திற்கு தேவையான விதை நெல்லை பெற்றுக் கொள்ள முடியும்.



காலபோக நீர் தேவை

| வயது | காலபோக நீர் தேவை |
|---|---|
| 4 மாதம் | 1350 (மி.மீ) |
| 31/2 மாதம் | 1325 (மி.மீ) |
| 3 மாதம் | 1275 (மி.மீ) |
| 21/2 மாதம் | 1225 (மி.மீ) |

| மாதம் | காலபோகத்தில் மழைவீழ்ச்சி (மி.மீ) | | |
|---|---|---|---|
| | 2016/2017 | 2015/2016 | 2014/2015 |
| புரட்டாதி | - | 174.1 | 150 |
| ஐப்பசி | 93 | 193.1 | 350 |
| கார்த்திகை | 241 | 402.6 | 410 |
| மார்கழி | 44 | 205.1 | 460 |
| தை | - | 68 | 0 |
| மாசி | - | 25 | 186.4 |
| பங்குனி | - | 0 | 88.2 |
| மொத்தம் | 378 | 1067.9 | 1644.6 |

**1. பயிரின் வயது, வளர்ச்சி நிலைக்கு ஏற்ப நீரை விநியோகித்தல் மற்றும் நீரை பயன்படுத்தல்**

காலபோகத்தில் நெற்பயிருக்குநாள்ஒன்றுக்குதேவையான நீரின் அளவு 3மி.மீ. ஆகும்.

**2. பயிரின் முக்கியமான கட்டங்களில் குறித்தளவு நீரை வழங்கல்**

நெற் பயிரின் பதிய அவத்தையில் நீர் பற்றாக்குறை ஏற்படுமாயின் தாவர உயரம், மட்டங்களின் எண்ணிக்கை, இலைப்பரப்பு என்பன குறையும். ஆனால் நெற் பயிரானது பூப்பதற்கு முன்னர் அது மீள வளர்வதற்கு போதியளவான காலம் நீரை வழங்கினால் விளைச்சல் பாதிக்கப்பட மாட்டாது.

நெற் தாவரமானது பூக்கள் மலர்தல், மணிகள் நிரம்பல் போன்ற தொடக்க பருவம் முதல் பிந்திய குடலைப்பருவம் வரை நீர்ப்பாற்றாக்குறைவிற்கு தூண்டற்பேறுடையது.

நீர்ப் பற்றாக் குறைவின் அறிகுறிகளை அறிந்து கொள்ளல் மிகவும் அவசியமாகும்.

இலை சுருளல், எரிதல், மட்டம் பெயாதல் தடைப்படல், கட்டையாதல், பூத்தல் காலம் தாமதமாதல், மலட்டுத்தன்மை, தானியங்கள் பகுதியாக நிரம்பல்.

3. நீர்ப்பாசன இடைவெளியை அதிகரித்தல்

4. விழிப்புணர்வு கூட்டங்கள் ஒழுங்கு செய்தல்

5. நீரின் வினைத்திறனான பாவனை

6. மாற்று நீர் நிலைகளைப் பயன்படுத்துதல்

7. குறிப்பிட்டளவு பயிர் செய்கையையாவது காப்பாற்றல்

முழு பயிர் செய்கைக்கும் நீர் போதாதுவிடில் ஒரு சில பகுதியையாவது பாதுகாப்பதற்கு வசதியாக அனைத்து விவசாயிகளுடனும் கலந்துரையாடி கைவிட வேண்டிய பகுதியைத் தீர்மானித்தல்.

சாத்தியமான மாற்றுக்களாக,

அனைத்து விவசாயிகளும் தாம் பயிர் செய்துள்ள விஸ்தீரணத்தை அரைவாசியாக குறைத்தல்.

நீர்ப்பாசன வாய்க்காலில் முற்பகுதியில் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து உற்பத்தியை பெற்றுக்கொள்ள வசதியாக வாய்க்காலின் முடிவில் அமைந்துள்ள சில விவசாயிகள் கைவிடல். (வாய்க்காலின் முடிவில் உள்ள விவசாயிகள் காப்புறுதி பெற சிபார்சு செய்தல்). அல்லது வாய்க்காலின் ஆரம்பத்தில் வயலை கொண்டுள்ள விவசாயிகளை வயலின் இறுதியில் வயலைக் கொண்டுள்ள விவசாயிகளிற்கு இழப்பீடுகளை செலுத்துமாறு கேட்டல். அல்லது இவர்களுக்கு வரும் போகத்தில் முன்னுரிமை வழங்க உறுதி வழங்கல்.

8. இலை மூலம் போசணைச் சத்துக்களை வழங்குதல்

மண்ணில் போதியளவு ஈரப்பதன் இல்லாத நிலையில் திரவப்பசளை விசுறுவதே பயிருக்கு தேவையான போசணைகளை வழங்குவதற்குரிய ஒரேயொரு வழிமுறையாகும்.

திரவப் பசளைகளை பயிருக்கு விசிறுவதன் மூலம் பசளைப் பாவனைக்கென பயன்படுத்தப்படும் நீரின் அளவைக் குறைத்துக் கொள்ள முடியும்.

யூரியா, மண்புழுத்திர வம் போன்றவற்றையும் இலை மூலம் வழங்கமுடியும்.

இலை மேற்பரப்பில் ஆவியுயிர்ப்பைக் குறைக்கக்கூடிய தாவர ஊக்கிகளை பயன்படுத்தல் நீரிழப்பினை குறைக்கும். (2)




# உழவு இயந்திரம் மூலம் கடத்தப்பட்ட ஆற்றுமணல் சுற்றிவளைப்பில் கைப்பற்று

## கல்லாறு கிராமத்தில் சம்பவம்

கிளிநெச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறுக் கிராமத்தில் அனுமதிப்பத்திரம் இல்லாது ஆற்று மணலை உழவு இயந் திரம் மூலம் கடத்திய போது கிளிநெச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரின் விசேட சுற்றி வளைப்பில் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எம். என். டீ. சதுரங்கா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

கிளிநெச்சிமாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, கல்லாறுக் கிராமத்தில் திடீரென சுற்றிவளைப்பைமேற்கொண்ட போது சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரம் இன்றி ஆற்று மணல் கடத்தலில் ஈடுபட்ட உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் கைதான சந்தேகநபரும், தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் கைதான சந்தேகநபரிடம் விசாரணைகள் முடிவுற்ற நிலையில் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மீண்டும் எதிர்வரும், ஜனவரி மாதம் 5 ஆம் திகதி தடயப்பொருட்களுடன் சந்தேக நபர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

கிளிநொச்சி மக்கள் அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி லண்டனில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வின் மூலம் 99 துவிச்சக்கரவண்டிகள் கிளிநொச்சி மாவட்டம்தோறும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் பாடசாலைக்கு பயணம் செல்ல சிரமப்படும் மாணவர்களை இனம் கண்டு இத் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக இந் நிகழ்வில் சேகரிக்கப்படும் நிதி மூலமும் நன்கொடையாளர்கள் உதவியின் மூலமும் 99 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

சிகரம் அமைப்பின் ஆதரவுடன் இந் நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# மக்களின் விருப்பப்படி நாம் பொருத்து வீடுகளை வழங்குவோம்

## மீள்குடியேற்றம், புனர்வாழ்வு அமைச்சர் வவுனியாவில் தெரிவிப்பு

மக்களுக்கு பொருத்து வீடுகள் வேண்டும் என்றால் அவர்களது விருப்பப்படி நாம் அவர்களுக்கு வீடுகளை வழங்குவோம் என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் நேற்று முன்தினம் மக்களுக்கு காணிப்பத்திரங்கள் வழங்கிய போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு அபிவிருத்தி தொடர்பில் வடக்கு மாகாண சபையுடன் பேசவில்லை என்ற குற்றச்சாட்டுள்ளது. இது தொடர்பில் தங்களின் பதில் என்ன என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது,

வடக்கு மாகாண சபையுடன் எந்த பிரச்சினையும் இல்லை. வடக்கு மாகாண சபைக்கு செய்ய வேண்டிய சலுகைகள் எல்லாம் கூறியிருக்கின்றோம்.

அவர்களுக்கு ஏதாவது தேவை என்றால் நேரடியாக என்னுடைய அமைச்சுக்கு அனுப்பலாம். அவர்களது கோரிக்கைகள் எல்லாவற்றையும் நாங்கள் நிறைவேற்றுவதற்கு முன்வந்துள்ளோம். அவர்களுக்கு வேறு கோரிக்கைகள் இருந்தால் அந்த கோரிக்கைகளை எங்களிடம் கொடுத்தால் அநத கோரிக்கையின்படி நானே நடப்பேன் என கூறுகின்றேன.

பொருத்து வீடுகள் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கும் நிலையில் தாங்கள் அதனை நடைமுறைப்படுத்த முயல்வது ஏன் என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது,

அரசாங்கம் அதாவது ஜனாதிபதி கூறியது என்னவென்றால் மக்களுடைய விருப்பத்துக்கு ஏற்றவாறு அந்த மக்களுக்கு வீடுகள் வேண்டும் என்றால் அதை நாம் கொடுப்போம். அதன்படி தான் செய்கின்றோம். அரசியல் தீர்ப்பை நான் கொண்டு வரவில்லை. அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் நான் கதைக்க விரும்பவில்லை. நாங்கள் செய்ய வேணடிய கடமையைத் தான் செய்து கொண்டு வருகின்றோம் எனத் தெரிவித்தார். (2-250)

# மல்லாவி, ஐயங்கன்குளம் பகுதியில் சட்டவிரோத மண் கடத்தல் முறியடிப்பு

(குருமன்காடு)

வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் தமிழ் மொழிமூல தொலைபேசி முறைப்பாட்டுப் பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து மல்லாவி, ஐயங்கன்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மண் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் தமிழ் மொழி மூல தொலைபேசி முறைப்பாட்டு பிரிவுக்கு மல்லாவி, ஐயங்கன்குளம் பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தல் இடம்பெறுவதாக தகவல் கிடைத்தது. இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் குறித்த சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸாருக்கு உடனடியாக தகவல் வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் அனுமதி பெறாது சட்டவிரோதமாக மண் கடத்தலில் ஈடுபட்ட உழவு இயந்திரத்தினை மண் நிரப்பப்பட்ட நிலையில் கைப்பற்றியதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதேவேளை, கடந்த 15 ஆம் திகதி மன்னார், சிலாபத்துறை பகுதியில் சட்டவிரோதமாக மண் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை தொடர்பில் வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் தமிழ் மொழிமூல தொலைபேசி பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து குறித்த மண் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமது பகுதிகளில் நடைபெறும் சட்டவிரோத நடவடிக்கைகள், குழு மோதல்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் மொழிமூல முறைப்பாடுகளுக்காக 076 622 4949, 076 622 6363 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (2-250)

# தமிழர்களின் வரலாறுகளை அரசு திட்டமிட்டு அழிக்கின்றது

## சாந்தி எம்.பி. ஆதங்கம்

(பனிக்கன்குளம்)

தமிழ் மக்களின் வரலாறுகளை அழிக்கும் வகையில் வடக்கு, கிழக்கில் புத்தர் சிலைகள் மற்றும் விஹாரைகள் அமைக்கப்படுவதற்கு எதிராக மைத்திரி- ரணில் நல்லாட்சி அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமை கவலையளிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன் யுத்தத்தின் வடுக்கள் வடபகுதி மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்குவதாக அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட இந்துமாமன்ற அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மற்றும் கரைதுறைப்பற்று, ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளை சேர்ந்த இந்துமாமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் .

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சோழர் காலத்தில் எவ்வாறு தென்னிந்தியாவில் அறநெறி வளர்க்கப்பட்டதோ அதேபோன்று வடக்கு, கிழக்கிலும் அறநெறி வளர்க்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (2-281)




# 42 ஆயிரத்து 158 குடும்பங்கள் முல்லைத்தீவில் மீளக்குடியமர்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 42 ஆயிரத்து 158 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 750 அங்கத்தவர்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட செயலக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்பிரகாரம் துணுக்காயில் 3 ஆயிரத்து 786 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 856 அங்கத்தவர்களும் மாந்தை கிழக்கில் 2 ஆயிரத்து 933 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 197 அங்கத்தவர்களும் ஒட்டிசுட்டானில் 5 ஆயிரத்து 961 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 415 அங்கத்தவர்களும் கரைதுறைப்பற்றில் 13 ஆயிரத்து 224 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 79 அங்கத்தவர்களும் புதுக்குடியிருப்பில் 12 ஆயிரத்து 918 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 14 அங்கத்தவர்களும் வெலிஓயாவில் 3 ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 189 அங்கத்தவர்களும் குடியமர்ந்துள்ளனர் என்று புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. (2-281)



கனடா வாழ் அன்பர் ஒருவரின் முதலாவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரின் உறவினர்களால் ஒட்டுசுட்டான் கற்சிலைமடுவின் குழந்தைகள் நிலைய மாணவர்களுக்கு அறுசுவை மதிய உணவும் மற்றும் கற்றலுக்கான பல்வேறான உதவிகளும் கடந்த 24 ஆம் திகதி யாழ். எய்ட் ஊடாக வழங்கி வைத்தனர்.

# கற்றல் உபகரணப்பொதிகள் 150 மாணவர்களுக்கு வழங்கி வைப்பு

(மல்லாவி)



முல்லைத்தீவு மாவட்ட கமநல மற்றும் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணப் பொதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வுக்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவீச்சந்திரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித்திணைக்கள உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

மேற்படி நிதியத்தின் அனுசரணையுடன் ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 9 பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்களில் 6 பாடசாலைகளைச் சேர்ந்த 117 மாணவர்களுக்கு கற்றல் உபகரணப் பொதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

இந் நிலையில், மிகுதியாக இருந்த மு/பெரிய புளியங்குளம் அ. த. க. பாடசாலை, மு/ஒலுமடு அ. த. க. பாடசாலை, மு/கரிப்பட்ட முறிப்பு அ. த. க. பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் 33 மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணப் பொதிகளே கடந்த 27 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2-15)

# பல்லவராயன், அக்கிராசன் மன்னர்களுக்கு சிலைகள்

(மல்லாவி)

வன்னி பெருநிலப்பரப்பை ஆட்சி செய்த பல்லவராயன் மற்றும் அக்கிராசன் ஆகிய இரு மன்னர்களுக்கும் கிளிநொச்சி, பல்லவராயன் கட்டு சந்தி, அக்கராயன் சந்தி ஆகிய பகுதிகளில் சிலைகளை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் கிளிநொசசி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இதற்கு அனுமதியளித்திருக்கும் நிலையில், விரைவில் இச்சிலைகள் அமைக்கப்படவுள்ளதாக யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

பல்லவராயன்கட்டு தொடக்கம் அக்கராயன், யூனியன் குளம், ஊற்றுப்புலம், வட்டக்கச்சி ஆகிய இடங்களைத் தொடர்ச்சியாக தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்தமைக்கான வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன.




இதனடிப்படையில் அக்கராயன் கிராமம், பல்லவராயன்கட்டு கிராமம் ஆகிய பகுதிகளை முறையே அக்கிராசன் என்ற மன்னனும் பல்லவராயன் என்ற மன்னனும் ஆட்சி செய்திருக்கின்றனர்.

எனினும் இந்த மன்னர்கள் தொடர்பான தகவல்கள் மறைக்கப்பட்டு அவர்களுடைய வரலாறும் இல்லாமல் போயுள்ளது.

இந்நிலையில் பல்லவராயன்கட்டு மற்றும் அக்கராயன் குளத்தை சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் தொல்பொருள் சின்னங்கள் மற்றும் யூனியன்குளம், ஊற்றுப்புலம்பகுதிகளில்காணப்படும் அரண்மனை எச்சங்கள் மற்றும் ஆலயங்கள் போன்றன இந்த மன்னர்களின் ஆட்சிக்கு சான்றுப் பொருட்களாகவுள்ளன.

இவ்வாறான நிலையில் வரலாற்று ஆய்வாளர்களின் பங்களிப்புடனும் மற்றும் ஒத்துழைப்புடனும் இரு மன்னர்களதும் சிலைகளை அமைக்க தலா இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வீதம் ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத் தில் முன்வைக்கப்பட்டு அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

தென்னிந்திய திருச்சபை முறிகண்டி புனித பவுல் ஆலயத்தின் நத்தார் இன்னிசை வழிபாடும் ஒளி விழாவும் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற குறித்த வழிபாட்டில் நத்தார் இன்னிசை வழிபாடு இடம்பெற்றதைத் தொடர்ந்து ஒய்வு நாள் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2017 முதல் 31.12.2017



### சமயோசித புத்தியால் சாதனை நிகழ்த்தும் மேட இராசி அன்பர்களே!

தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் வாழ்க்கை நடத்துபவர்கள் நீங்கள். துணிவும் பணிவும் கொண்டிருப்பதால் தான் எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிக்கிறீர்கள். உங்கள் இராசியின் சின்னம் துள்ளித் திரியும் ஆடு என்பதால் சுறுசுறுப்பு உங்கள் உடலிலேயே ஒட்டிக் கொண்டிருக்கும்.

உங்கள் ராசிநாதன் 'தைரியகாரகன்' என்றழைக்கப்படும் செவ்வாய். எனவே அஞ்சாமல் செயற்படுவீர்கள். எதற்கும் கவலைப்பட மாட்டீர்கள்.

இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த புத்தாண்டு வளர்ச்சியைத் தருமா?, வருமானத்தைப் பெருக்குமா? மனக்கவலை தீர்க்குமா? என்பதைப் பற்றிப்பார்ப்போம்.

**புத்தாண்டின் தொடக்கம்**

உங்களுக்கு எண்ணற்ற நன்மைகள் வந்து சேரும் காலம் இது. புத்தாண்டு தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், தனாதிபதி சுக்ரனும் கூடி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே,

## அதிர்ஷ்ட தேவதை அடியெடுத்து வைக்கும் நேரம்!

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். பல நல்ல திருப்பங்கள் ஏற்படும். இனத்தார் பகை மாறி, எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். மனதில் நினைத்த காரியங்களை, மறுநிமிடமே செய்து முடிக்கும் ஆற்றல் பிறக்கும். ஆலய வழிபாடுகளை மேற்கொள்ளவும் முன்வருவீர்கள்.

புத்தாண்டு தொடங்கும் பொழுது 5 ஆம் இடத்தில் ராகுவும், 6 ஆம் இடத்தில் குருவும் 8 ஆம் இடத்தில் சனியும், 11 ஆம் இடத்தில் கேதுவும் இருக்கின்றன. 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், சனியோடு இணைந்திருக்கிறார். கேதுவுடன் செவ்வாய், சுக்ரன் சேர்க்கை பெற்றிருக்கிறார்கள். திருவோண நட்சத்திரத்தில், சந்திர சாரத்தில் புத்தாண்டு பிறக்கிறது. சூரியன் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஏற்றமும் மாற்றமும் உங்களைத் தேடி வரும் என்றே சொல்லலாம். கூட்டு முயற்சிகளில் இருந்து விடுபட்டு தனித்து இயங்கவும், தன்னிச்சையாகச் செயற்பட்டு தன வரவை வரவழைத்துக் கொள்ளவும் வழிபிறக்கப் போகிறது.

மாபெரும் கிரகங்கள் என்று வர்ணிக்கப்படும் குரு, சனி, ராகு- கேது ஆகியவை இந்த ஆண்டு பெயர்ச்சியாகப் போகின்றன.

எனவே 6 இல் இருக்கும் குரு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்க்கும் பொழுது, தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். 5 ஆம் இடத்தில் உள்ள ராகு 4 ஆம் இடத்திற்கும், 11 ஆம் இடத்தில் இருக்கும் கேது 10 ஆம் இடத்திற்கும் பின்னோக்கி வந்து சஞ்சரிக்கும் பொழுது வாழ்வில் முன்னோக்கிச் செல்ல வழி பிறக்கும். இதுவரை பல தடைகளையும் தாமதங்களையும் உருவாக்கி வந்த அஷ்டமத்துச் சனி இந்த ஆண்டு கடைசியில் விலகப் போகிறது. எனவே வம்பு வழக்குகள் தீரும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் அகலும். மங்கள ஓசை மனையில் கேட்கும். இழந்த சொத்துக்களை திரும்ப பெறும் வாய்ப்பு உண்டு. கடன் பிரச்சினைகள் தீரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**நன்மை தரும் ராகு-கேது பெயர்ச்சி**

27.7.2017 அன்று ராகு-கேது பெயர்ச்சி ஏற்படுகிறது. இதுவரை உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு, இப்பொழுது 4 ஆம் இடத்திற்குச் செல்கிறார். அதே நேரத்தில் இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த கேது, பத்தாம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு செல்கிறார். இதனால் வரும் மாற்றங்கள், வளம் தரும் மாற்றங்களாகவே அமையப் போகிறது.

வீடு கட்டி அல்லது வீடு வாங்கிக் குடியேற வேண்டும் என்ற எண்ணம் இருப்பவர்களுக்கு அது கைகூடி வரும் நேரம் இது. பணியில் இருக்கும் தொய்வு அகலும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் உதவிக் கரம் நீட்டுவர். தக்க விதத்தில் தொழில் சீராக நடைபெறும். தன்னம்பிக்கையோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள். கூட்டு முயற்சியில் இருந்த குறைபாடுகள் அகலும்.

அர்த்தாஷ்டம ராகு அடிக்கடி தொல்லைகளைக் கொடுக்கும் என்பது பொது நியதி. இருப்பினும் உங்கள் இராசிக்கு 3,6 இற்கு அதிபதியான புதன் காலில் சஞ்சரிப்பதால் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். உத்தியோகத்தில் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் ஏற்படும். மேலதிகாரிகள் உங்களுக்கு அனுகூலமாக நடந்து கொள்வர்.

10 இல் சஞ்சரிக்கும் கேதுவால் பணியிடத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் அகலும். நீங்கள் யார் என்பதை நிரூபித்துக் காட்டுவீர்கள். செய்யும் தொழிலை விட்டுவிடலாமா? என்று யோசித்தவர்களுக்கு, புதிதாக இணையும் பங்குதாரர்களால் உற்சாகம் பிறக்கும். கேட்ட இடத்தில் கேட்ட தொகை கிடைக்கும். அரசு வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைப்பதற்கான அறிகுறிகளும் தென்படும். ராகு-கேது பெயர்ச்சியால் மேலும் நன்மைகளைப் பெற, உங்கள் சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்களின் பாதசார பலன் பார்த்து, அதற்குரிய ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து, யோகபலம் பெற்ற நாளில் நாக சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்ளுங்கள். முன்னேற்றத்தில் முதல்படிக்குச் செல்ல வைப்பது வழிபாடுகளும் பரிகாரங்களும் தான்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி**

2.9.2017 இல் குரு, துலாம் இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். இதுவரை 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு, 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து எண்ணற்ற நன்மைகளை வழங்கப் போகிறார். குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. அதுமட்டுமல்லாமல் உங்கள் ராசிக்கு 3,11 ஆகிய இடங்களிலும் குருவின் பார்வை பதிகிறது. எனவே அந்த இடங்களும் புனிதமடைகின்றன. 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு ஜென்மத்தில் பதிவதால் ஆரோக்கிய தொல்லை அகலும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். வந்த துயரங்களை சமாளிக்கவும் வருங்கால முயற்சிகளில் வெற்றி கிடைக்கவும் குரு பார்வை கைகொடுக்கும்.

இதுபோன்ற நேரங்களில் அனுகூலம் தரும் நாளில், திருச்செந்தூர், ஆலங்குடி, பட்டமங்கலம், திருவாலிதாயம், குருவித்துறை போன்ற தலங்களுக்குச் சென்று குருவை வழிபடுவது நல்லது. குரு உங்கள் ஜாதகத்தில் பகை கிரகத்தோடு சேர்ந்தோ, பார்த்தோ இருந்தால், திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபடுவதன் மூலம் திடீர் திருப்பங்கள் ஏற்படும். குரு பார்வையால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். புதிய முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். உத்தியோக வாய்ப்பு ஏற்படும். ஆரோக்கியத் தொல்லை அகலும். மனப்பாரம் குறைந்து மகிழ்ச்சி கூடும்.




**சனிப்பெயர்ச்சி காலம்!**

இதுவரை உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி 16.12.2017 இல் தனுசு இராசிக்குச் செல்கிறார். விலகும் சனியால் விரும்பிய காரியங்கள் நடைபெறும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் விலகும். வீடு கட்டுவதில் இருந்த தடை அகலும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். மனக்கவலை மாறும்.

சனி பகவான், உங்கள் இராசிக்கு 10,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் 9 இல் உலாவரும் பொழுது, பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும் புகழ்கூடும். அன்புள்ளம் கொண்டவர்கள், உங்கள் அருகிலிருந்து அனைத்து உதவிகளையும் செய்து கொடுப்பர். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். பூர்வீகச் சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சாயத்துகளில் புதிய திருப்பங்கள் ஏற்படும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

சுக்ரன் வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 18.04.2017 வரை) உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு குறையலாம். வரவேண்டிய பதவி உயர்வுகள் தாமதப்படலாம்.

புதன் வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 22.04.2017 வரை) பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படும். எவ்வளவு விழிப்புடன் செயற்பட்டாலும் விரயங்கள் கூடும். குடும்பச் சுமை கூடுகிறதே என்று கவலைப்படுவீர்கள்.

குரு வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 31.05.2017 வரை) நன்மையும் தீமையும் கலந்தே வந்துசேரும். 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக குரு விளங்குவதால், பங்காளிப் பகை அதிகரிக்கும். தனவிரயம் உண்டு. ஒரு சிலர், வெளிநாட்டில் இருந்து தாய்நாடு திரும்ப நேரிடும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லை ஏற்படும்.

சனி வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 06.08.2017 வரை), தொழிலில் அதிக விழிப்பு ணர்ச்சி தேவை. நண்பர்களால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பணியாளர்களின் தொல்லை அதிகரிக்கும். மிதமிஞ்சிய பொருளாதாரத்தில் இருந்த நீங்கள், வருமானப் பற்றாக்குறையால் கவலைப்படுவீர்கள். தன்னம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

அஷ்டமத்துச் சனிக்கு பரிகாரமாக, சனிக்கிழமை தோறும் விரதம்இருந்து வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரை வழிபாடு செய்வது நல்லது.

கேட்ட வரங்களை அள்ளிக் கொடுக்கும், கோட்டையூர் சொற்கேட்ட விநாயகரை யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டு வாருங்கள். கணபதி வழிபாடு காரிய வெற்றியை வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

### மேட இராசியில் பிறந்த பெண்களுக்கு!

**குடும்பத்தில் சுப காரியங்கள் நிறைய நடைபெறும். சகோதர ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியத் தொல்லை அகலும். புதிய வாகனம் வாங்கும் அமைப்பு உண்டு. கணவன்-மனைவிக் குள் கனிவும் பாசமும் கூடும். மனக்கவலை மாறும். குழந்தை களின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். தாய் வழி ஆதரவு திருப்தி கரமாக இருக்கும். குருப்பெயர்ச் சிக்குப் பிறகு குடும்பத்தில் மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்க வழி பிறக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும். கிரகங்களின் வக்ர காலத்தில் விழிப்புணர்ச்சி தேவை. சஷ்டி விரதம் இருந்து சண்முக நாதப் பெருமானை வழிபடுவதன் மூலம் சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்ள இயலும்.**

# அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்தை பாராளுமன்றத்துக்குக் கொண்டுவர முடியாது

## லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு




(கொழும்பு)

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை மக்கள் எதிர்ப்பார்களாயின் அது ஜனநாயக உரிமையாகும். மக்களின் விருப்பத்துக்கு மாறாக அச்சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது.

மகாணசபையில் எதிர்ப்புக்குள்ளான சட்டத்தை ஒருபோதும் பாராளுமன்றத்துக்கு கொண்டுவர முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நிதியமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)




# மாகாணசபைகளின் ஒப்புதலுக்காக மீண்டும் அபிவிருத்திச் சட்டமூலம்

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அபிவிருத்தி(விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஒரு வாரத்தில் சகல மாகாண சபைகளிலும் மீண்டும் கொண்டு வந்து அதனை நிறைவேற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது கொண்டு வரப்பட்ட அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்ஊடாக சுப்பிரி அமைச்சர் ஒருவர் உருவாக்கப்படுவார் என்றும் மாகாண சபைகள் சவாலுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் கூறப்பட்டதால் மாகாண சபைகளில் இந்த சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டது.

அபிவிருத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள், அமைச்சரவையில் ஒப்புக்கொண்ட நிலையில், இந்த சட்டமூலம் தோற்கடிக்கப்பட்ட மாகாண சபைகளில் மீண்டும் கொண்டு வந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

# 2900 பேர் உயிரிழப்பு 2016 டிசெம்பர் 25 ஆம் திகதி வரை

## 41 ஆயிரம் பேர் விபத்துக்களில் சிக்கினர்

வாகன விபத்துக்களில் இந்த ஆண்டில் 2900 பேர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். இந்த ஆண்டின் டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதிவரையில 41000 பேர் வாகன விபத்துக்களில் சிக்கியுள்ளனர்.

2015 ஆம் ஆண்டில் வாகன விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2816 ஆக சுகாதார அமைச்சிற்கு தகவல் கிடைத்திருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் மட்டும் வாகன விபத்துக்கள் காரணமாக கொழும்பு தேசிய வைத்திய சாலையில் 817 பேர் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டிருந்தனர் எனத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் வாகன விபத்துக்களினால் உயிர்ச் சேதங்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போரே அதிகளவில் விபத்துக்குள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# பால்மாக்களின் விலைகளை அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பால்மாக்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பால்மாக்களின் விலைகளை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பாலிறக்குமதி சங்கம் மற்றும் பாலுற்பத்தியாளர் சங்கம் என்பன இணைந்து குறித்த கோரிக்கையினை முன்வைத்துள்ளன.

பாலிறக்குமதி தீர்வை மற்றும் அதிக செலவினங்களை கருத்திற் கொண்டே குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் அண்மையில் தான் வரவு- செலவுத்திட்டத்தினூடாக பால்மாக்களின் விலை குறைக்கப்பட்டது. ஆகவே இது தொடர்பில் திடீர் தீர்மானத்தை எடுக்க முடியாது.

அவ்வாறு முடிவெடுக்கும் பட்சத்தில் பாரிய விளைவுகள் ஏற்படும் என்று நுகர்வோர் சங்கம் குறித்த கோரிக்கையினை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)



கலைஞர்களுக்கான கலா பூஷண அரச விருது 2016 இற்கான வைபவம் கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு தாமரைத் தாடக மண்டபத்தில் நடைபெற்ற போது நல்லைக்குருமணியின்பிரதமவாரிசு கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவவை நித்தியானந்த சர்மாவை பாராட்டி இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் சர்மாவுக்கு கலாபூஷணம் என்னும் அரச விருது வழங்கிக் கௌரவித்த போது...

# 24 கைக்குண்டுகள், ஒன்பது துப்பாக்கிகளுடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்



வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட சட்ட விரோதமான ஆயுதங்களை வைத்திருந்த இரண்டு பேரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மாரவில பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஆயுதங்கள் வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்தே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களிடமிருந்து 24 கைக்குண்டுகள், 9 துப்பாக்கிகள் மற்றும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை இவர்களை நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தவுள்ளதோடு இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மாரவில பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-3)

# விசேட வாக்குமூலம் வழங்க தயாராகும் அநுர சேனநாயக்க

## குழப்பத்தில் ராஜபக்ஷ குடும்பம்

(கொழும்பு)

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் கொலை தொடர்பான தகவல்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க விசேட ஒப்புதல் வாக்குமூலம் வழங்க தயாராகி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இதுபற்றி அறிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் இதனை கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸிடம் அறிவித்துள்ளதுடன் நீதிமன்றமும் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

தாஜுடீன் கொலை சம்பந்தமாக அநுர சேனநாயக்க விசேட வாக்குமூலம் ஒன்றை வழங்கத் தயாராகியுள்ள நிலையில், ராஜபக்ஷ குடும்பத்திற்குள் கடும் குழப்பமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.



குறிப்பாக தாஜுடீனை கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட டிபெண்டர் வாகனம், ஷிராந்தி ராஜபக்ஷவுக்கு சொந்தமான "சிறிலிய சவிய" என்ற அமைப்பு பயன்படுத்திய வாகனமாகும்.

மேலும், சம்பவம் நடந்த தினத்தில் ஜனாதிபதி மாளிகை மற்றும் தங்காலை கால்டன் இல்லம் ஆகியவற்றில் இருந்து நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி அழைப்புகள் எடுக்கப்பட்டிருந்தமை ஆகிய காரணங்களால் கொலையுடன் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு தொடர்பிருப்பதாக சமூகத்தில் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

இதனைத் தவிர தாஜுடீன் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வெளிநாட்டில் இருந்து வந்த அவரது சகோதரர், நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரியால் மிரட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொறுப்பதிகாரியிடம் வாக்குமூலம் பெற நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (இ-3)

# குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தினால் இஸ்ரேலுடன் பாலஸ்தீனம் பேச்சுக்குத் தயார்

## ஜனாதிபதி முஹ்மத் அப்பாஸ் அறிவிப்பு

(ரமல்லாஹ்)

**தங்கள் நாட்டுப் பகுதிகளில் சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தினால் இஸ்ரேலுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று பாலஸ்தீன ஜனாதிபதி முஹ்மத் அப்பாஸ் அறிவித்துள்ளார்.**

இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே நீண்ட நெடுங்காலமாக பகை நிலவி வருகிறது. ஆக்கிரமிப்பு பாலஸ்தீன பகுதிகளில் குறிப்பாக கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகளில் இஸ்ரேல் வலுக்கட்டாயமாக குடியிருப்புகளை அமைத்து வருகிறது.

இதைத் தடுத்து நிறுத்தக் கோரி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மலேசியா, நியூசிலாந்து, செனகல், வெனிசுவெலா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்தை முன்வைத்தன.

அந்த தீர்மானத்தில், "கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட ஆக்கிரமிப்பு பாலஸ்தீன பகுதிகளில் குடியிருப்பு செயற்பாடுகளை இஸ்ரேல் முழுமையாக நிறுத்திக்கொள்ள வேண்டும். இது தொடர்



பான சட்டதிட்டங்களை இஸ்ரேல் மதித்து நடக்க வேண்டும்" என கூறப்பட்டிருந்தது.

இந்த தீர்மானத்தின்மீது கடந்த வாரம் வெள்ளிக்கிழமை (டிச.23) வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் 15 நாடுகளில் 14 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து விட்டது. இதனால் தீர்மானம் நிறைவேறியது.

இதனையடுத்து தீர்மானத்துக்கு கடும்கண்டனம்தெரிவித்த இஸ்ரேல், ஐ.நா.சபை உடனான தமது உறவை முறித்துக் கொள்ளப் போவதாக தெரிவித்தது. இருப்பினும் பின்னர் தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள ஒப்புதல் அளிப்பதாக இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.

1979ஆம் ஆண்டுக்கு பிறகு இப்போதுதான் குடியிருப்பு கொள்கையில் இஸ்ரேலுக்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற அமெரிக்கா வழிவிட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஜோன் கெரி இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பேசினார்.

இதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேட்டன்யாஹு" ஜோன் கெரியின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்தார்.

இந்நிலையில், தங்கள் நாட்டு பகுதிகளில் குடியேற்றங்களை தடுத்து நிறுத்தினால் இஸ்ரேலுடன் அமைதி பேச்சுவார்த்தைக்கு தயார் என்று பாலஸ்தீன ஜனாதிபதி முஹ்மத் அப்பாஸ் தெரிவித்துள்ளார். (இ)

# மத்திய அரசின் அவசர சட்டத்துக்கு சீதாராம் யெச்சூரி கடும் கண்டனம்

இந்திய மத்திய அரசின் அவசர சட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ரூ.500, ரூ.1000 செல்லாத நாணயத்தாள்களை அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்கு பிறகு வைத்திருந்தால் சிறைத்தண்டனை என்ற அவசர சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கியது.

இதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டில்லியில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, ரூ.500, ரூ.1000 நாணயத்தாள்கள் செல்லாது என்ற அறிவிப்பு மக்களுக்கு எதிரானது. இந்நிலையில் அந்த நாணயத்தாள்களை குறிப்பிட்ட நாட்களுக்கு பிறகு வைத்திருந்தால் சிறைத் தண்டனை என்ற அவசர



சட்டம் சட்டவிரோதமானது.

50 நாட்களில் இந்த பிரச்சினை சீராகும் என பிரதமர் மோடி தெரிவித்தார். ஆனால் மக்களுக்கு அவதி அதிகரித்துக் கொண்டு தான் இருக்கிறது. பாராளுமன்றத்தில் இந்த சட்டத்தை நிறைவேற்ற பயந்து குறுக்கு வழியில் மத்திய அரசு தற்போது இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தப் பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து மத்திய அரசுக்கு எதிராக போராட முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வங்கிகளில் ரூ.98கோடி கறுப்புப்பணம் வைப்பு

## ஐதராபாத் தொழிலதிபர் கைது

(ஐதராபாத்)

ஐதராபாத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் தனது வங்கிக் கணக்குகளில் முறைகேடாக 98 கோடி ரூபாய் கறுப்புப் பணத்தை வைப்புச் செய்ததற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக மத்திய அரசு கடந்த மாதம் 8ஆம் திகதி ரூ.500, ரூ.1000 நாணயத்தாள்கள் செல்லாது என்று அறிவித்தது.

பொதுமக்கள் தங்களிடம் உள்ள ரூ.500, ரூ.1000 நாணயத்தாள்களை வங்கிகளில் கொடுத்து மாற்றிக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி 12 இலட்சம் கோடிக்கும் மேற்பட்ட பணம் மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

இதற்கிடையே கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்து இருப்பவர்கள் சட்டவிரோதமாக செயற்பட்டு பணத்தை மாற்றி இருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் அமுலாக்கப் பிரிவு, வருமான வரித்துறை உள்ளிட்ட மத்திய விசாரணை முகாமைகள் அவ்வப்போது அதிரடி சோதனைகளை நடத்தி வருகின்றன.

சோதனையின் போது அதிகாரிகள் மற்றும் தொழிலதிபர்களிடம் இருந்து இலட்சக்கணக்கான பணம் புதிய 2 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களாக பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஐதராபாத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் தனது வங்கிக் கணக்குகளில் முறைகேடாக 98 கோடி ரூபாய் கறுப்புப் பணத்தை செலுத்தியதற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

கைலாஷ் சந்த் குப்தா என்ற அந்த தொழிலதிபர் போலியான மற்றும் கற்பனையான ரசீதுகள் மூலம் அவர் பணத்தை வைப்புச் செய்து வந்தது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக கைலாஷின் உறவினர்கள் சிலரையும் பொலிஸார் கைது செய்து அவர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-7)

# தென்கொரிய ஜனாதிபதி சம்பந்தமான ஊழலில் சம்சுங்குக்கும் தொடர்பு?

(சியோல்)

தென்கொரியாவின் ஜனாதிபதியை இடைநிறுத்துமளவுக்கு அந்நாட்டில் பிரபல்யமாகப் பேசப்படும் ஊழலில், சம்சுங் நிறுவனத்துக்கும் தொடர்பு காணப்படுகிறதா? என்பது தொடர்பில், விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இதனோடு சம்பந்தப்பட்டதாக தென்கொரியாவின் தேசிய ஓய்வூதியச் சேவைகளின் தலைவர் மூன் ஹையுங்-பியோ, நேற்றுக் கைது செய்யப்பட்டார். அதிகார துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலேயே, அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டார். ஆனால், கைதுக்கான காரணங்கள் தொடர்பில் அறிவிக்கப்படவில்லை. 8 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சம்சுங் குழுமத்தைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்களை இணைப்பதற்கு ஆதரவளிக்குமாறு அப்போது சுகாதார மற்றும் நலன்புரி அமைச்சராக இருந்த மூன் ஓய்வூதிய நிதியத்துக்கு அழுத்தம் வழங்கினாரா என்பது தொடர்பில், விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உலகில் மூன்றாவது மிகப்பெரிய ஓய்வூதிய நிதியமான தேசிய ஓய்வூதிய சேவைகள், சம்சுங்கின் துணை நிறுவனங்களான செய்ல் இன்டஸ்ட்ரீஸ், சம்சுங் சி அன்ட் டி கோர்ப் ஆகிய நிறுவனங்களில் பிரதானமான பங்குதாரர்களில் ஒன்றாகவும் காணப்படுகிறது. (இ-7)

# சீன உதவியுடன் கட்டிய அணுமின் உலையை பாக். பிரதமர் திறந்து வைத்தார்




(இஸ்லாமாபாத்)

சீனாவின் நிதி உதவியுடன் கட்டிய 340 மெகாவோட் திறன் கொண்ட அணுமின் உலையை பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் திறந்து வைத்தார்.

பாகிஸ்தான் அரசு சீனாவின் உதவியுடன் இஸ்லாமாபாத்தில் இருந்து 250 கி.மீற்றர் தொலைவில் உள்ள மியான்வலி மாவட்டத்தின் சஷ்மா என்ற இடத்தில் சஷ்மா III என்ற அணுஉலையை கட்டி வந்தது.

அதன் இறுதிக் கட்ட பணி முடிந்துள்ள நிலையில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்நேற்று முன்தினம் இந்த உலையை திறந்து வைத்தார்.

அணுஉலையை திறந்து வைத்து பேசிய அவர் "சஷ்மா III அணுஉலையை சுமைகளை குறைப்பதற்கான அரசு நடவடிக்கையின் முக்கியமான மைல்கல்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த அணுஉலை பாகிஸ்தான் மற்றும் சீனாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முறையில் உருவாக்கப்பட்டதாகும்.

இதே இடத்தில் சஷ்மா-IV அணுஉலை கட்டப்பட்டு வருகிறது.


சஷ்மா- II மற்றும் சஷ்மா- III ஆகிய இரண்டு அணுஉலைகள்மூலம்பாகிஸ்தான் நாட்டிற்கு 600 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

2030இற்குள் 8800 மெகாவோட் மின்சாரத்தை அணுஉலைகள் மூலம் தயாரிக்க பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது. (இ-7)

# சிரியாவில் ரஷ்யத் தூதரகம் மீது இருமுறை குண்டு வீசித்தாக்குதல்!

(மொஸ்கோ)

**சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள ரஷ்ய நாட்டின் தூதரகம் மீது அடுத்தடுத்து இரு முறை குண்டு வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது உலகளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**



ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளின் துணையுடன் சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் மீது பஷர் அல் ஆசாத் தலைமையிலான அந்நாட்டு அரசு தாக்குதலை நடத்திவருகிறது.


ரஷ்ய ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்த தாக்குதலால் அலெப்போ நகர் முழுவதுமாக அரசு படைகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில், சிரிய தலைநகர் டமாஸ்கஸில் உள்ள ரஷ்ய நாட்டின் தூதரகம் மீது நேற்று முன்தினம் இருமுறை குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

அதில், ரஷ்ய தூதரகம் மீது இரண்டு முறை இந்த குண்டுவீச்சு தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த தாக்குதலில் ஒன்று தூதரக வளாகத்தில் உள்ள முற்றம் பகுதியிலும் மற்றொன்று தூதரக ஆணையத்தின் அருகிலும் நடத்தப்பட்டுள்ளது. அமைதிப் பேச்சு வார்த்தையை தடம்புரளச் செய்யும் நோக்கத்துடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (இ-7)

# கிழக்கு சிரியாவில் விமானப்படை தாக்குதலால் 22 பேர் உயிரிழப்பு



சிரியா நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள ஒரு கிராமத்தின் மீது விமானப் படைக்கு சொந்தமான போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்ததில் 10 குழந்தைகள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர்அல்ஆசாத்தை பதவியை விட்டு இறக்கும் நோக்கத்தில் அங்குள்ள சில போராளிக் குழுக்கள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களை ஒடுக்குவதற்காக ஜனாதிபதி தலைமையிலான இராணுவப் படைகள் ஆவேசத் தாக்குதல் நடத்துகின்றன.

இதற்கு உதவியாக ரஷ்ய நாட்டு போர் விமானங்களும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

அவ்வகையில், கிழக்கு சிரியாவில் உள்ள டெய்ர் எஸ°ர் மாகாணத்துக்கு உட்பட்ட பகுதிகளில் போர் விமானங்கள் நேற்று முன்தினம் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் ஹோன்ஜா கிராமத்தைச் சேர்ந்த பத்து குழந்தைகள் உட்பட 22 பேர் பலியானதாக சிரியாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை பதிவு செய்யும் சர்வதேச கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (இ-3)

# ஆப்கான் பெண் விமானி அமெரிக்காவில் தஞ்சம்



பாதுகாப்பு இல்லை என்று கூறி ஆப்கானிஸ்தான் பெண் விமானி அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தார்.

ஆப்கானிஸ்தானின் முதல் பெண் விமானி நிலோபர் ரஹ்மானி (வயது - 25). இவர் அமெரிக்க விமானப் படையில் 15 மாதங்கள் பயிற்சி பெற்றார்.

பயிற்சி முடிந்து கடந்த வாரம் ஆப்கானிஸ்தான் திரும்பினார். அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் விமானப் படையில் பணியை தொடங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால்அவர் அமெரிக்காவில் தஞ்சம் அடைய இருப்பதாக யாரும் எதிர்பார்க்காத அறிவிப்பை வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

ஆப்கானிஸ்தானில் எனக்கு போதுமான பாதுகாப்பு இல்லை. பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுகிறது. மேலும் நாட்டை விட்டு இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் வெளியேறி வருகின்றனர். இக்காரணங்களால் அமெரிக்காவில் தங்க முடிவு செய்து இருக்கிறேன் என்றார்.

இதுகுறித்து ஆப்கான் இராணுவ அமைச்சக செய்தி தொடர்பாளர் முகமது ரத்மனோஷ் கருத்து தெரிவித்துள்ளார். அதில் அவரது இந்த முடிவு எதிர்பாராதது. பொறுப்பற்றது.

மேலும்வெட்கக்கேடானது. அவர் 1983 ஆம் ஆண்டு தேர்வான போது ஆப்கானிஸ்தானின் முதல் பெண் விமானி என்ற பெருமை பெற்றார்.


இலட்சக்கணக்கான ஆப்கானிஸ்தான் பெண்களின் அடையாளமாகவும் நம்பிக்கையாகவும் திகழ்ந்தார் என்று தெரிவித்துள்ளார். நிலோபர் ரஹ்மானி கடந்த ஆண்டு அமெரிக்க அரசின் பெண்களுக்கான வீரதீர விருது பெற்றார். இவருக்கு தலிபான் தீவிரவாதிகள் கொலை மிரட்டல் விடுத்தனர். இருந்தும் அவர் அதை பொருட்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விரைவு ரயில் தடம்புரள்வு 55 பேர் காயம்

கான்பூர் அருகே அஜ்மீர்-சீல்டா பயணிகள் விரைவு ரயில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 55 பேர் காயமடைந்தனர்.

இது குறித்து ரயில்வே அமைச்சகம் வெளியிட்ட தகவலில் உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரின் ரூரா ரயில் நிலையத்தின் அருகே நேற்று முன்தினம் புதன் கிழமை காலை 6 மணியளவில் 13 ரயில் பெட்டிகளை கொண்ட அஜ்மீர்-சீல்டா பயணிகள் விரைவு ரயில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதில் 55 பேர் காயமடைந்தனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன என்று கூறப்பட்டுள்ளது. (இ-7)



# காஸ்ட்ரோவின் சிலைகளுக்கு கியூபாவில் தடை



கியூபாவின் புரட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான பிடல் காஸ்ட்ரோவுக்கு சிலைகளை எழுப்பவும் அவரின் பெயரில் பொது இடங்களைப் பெயரிடவும் தடை விதிக்கும் சட்டமொன்று, அந்நாட்டு கீழவையால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த மாதம் உயிரிழந்த காஸ்ட்ரோவின் விருப்பத்துக்கு அமைவாகவே, இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. கியூபாவின் மிகப்பெரியளவில் வழிபடப்படும் காஸ்ட்ரோவின் பெயரில், நாடு முழுவதும் விளம்பரப்பலகைகள் காணப்படுவதோடு, அநேகமான அரச நிகழ்வுகளில், அவரது பெயர் உச்சரிக்கப்படுவது வழக்கமாகும்.

ஆனால் இவற்றுக்கு மத்தியில், தன்னை வழிபடும் ஒருவராக மாற்ற வேண்டாமென்பது காஸ்ட்ரோவின் கோரிக்கையாக இருந்தது.

இந்நிலையில், இது தொடர்பான கீழவை அமர்வில் கலந்து கொண்ட ஜனாதிபதியும் காஸ்ட்ரோவின் சகோதருமான ராவுல் காஸ்ட்ரோ "அவரது (பிடல் காஸ்ட்ரோ) போராடும் குணம், கியூபாவின் எல்லாப் புரட்சிகளிலும் இன்றும் நாளையும் எப்போதும் காணப்படும் தளபதிக்கான சிறந்த மரியாதையை வழங்குவதற்கு புரட்சி தொடர்பான அவரது கொள்கையைப் பின்பற்றுவதே சிறந்தது" எனத் தெரிவித்தார்.

புதிய சட்டத்தின்படி, பொது இடங்களைப் பெயரிடவும் சிலைகளை எழுப்பவும் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் இசையிலும் இலக்கியத்திலும் நடனத்திலும் சினிமாவிலும் ஏனைய விழிப்புலன் கற்கைகளிலும் பிடல் காஸ்ட்ரோவைப் பயன்படுத்துவதற்குத் தடை கிடையாது என அறிவிக்கப்படுகிறது.

அதேபோல் அலுவலகங்களிலும் கல்வி கற்கும் இடங்களிலும் அரச நிறுவனங்களிலும் காணப்படும் அவரது புகைப்படங்களும் தொடர்ந்து காணப்படலாம் என அறிவிக்கப்பட்டது. (இ-7)

# தொல்பொருள் சின்னங்கள் கண்காட்சியும் தேடல்சஞ்சிகை வெளியீடும்








கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள சின்னங்களைப் பார்வையிடலும் தேடல் சஞ்சிகையின் வெளியீட்டு விழாவும் நேற்று முற்பகல் 10மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டத்தின் தலைவர் பொ.வருண்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் கௌரவ விருந்தினர்களாக கலைப்பீட பதில் பீடாதிபதி கலாநிதி க.சுதாகர், வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா, சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். நூலின் முதற் பிரதியை வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் திருமதி விஜயலக்ஷ்மி கேதீஸ்வரன் பெற்றுக்கொண்டார். (படங்கள்:-உ.சாளின்)

# திண்மக்கழிவுகளை தரம்பிரித்து அகற்றும் நடவடிக்கை அடுத்த ஆண்டு முதல் கடுமையாக அமுல்படுத்தப்படும்

## யாழ்.மாநகரசபை ஆணையாளர் வாகீசன் அறிவிப்பு




யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திண்மக்கழிவுகளை தரம் பிரித்து அகற்றும் செயற்பாடு அடுத்த ஆண்டில் இருந்து கடுமையாக அமுல்படுத்தப்படவுள்ளது என தெரிவித்த யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் இச் செயற்பாட்டில் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி அமைச்சின் தேசிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாக திண்மக்கழிவுகளை தரம்பிரித்து அகற்றும் விழிப்புணர்வு செயற்றிட்டம் தொடர்பாக நேற்றைய தினம் யாழ்.மாநகர சபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி அமைச்சின் தேசிய முன்னெடுப்பின் ஒரு பக்தியாக நாடளாவிய ரீதியில் 23 மாநகர சபைகளில் திண்மக் கழிவுகளை தரம்பிரித்து அகற்றும் விழிப்புணர்வு செயற்றிட்டம் கடந்த நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வகையில் யாழ்.மாநகர சபையும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் திண்மக் கழிவு தரம்பிரிக்கும் செயற்பாட்டினை பாஷையூர், அரியாலை, நாவாந்துறை, நல்லூர், யாழ்.நகர்ப்பகுதி, வணணார்பண்ணை, குருநகர் போன்ற 7 பகுதி வலயங்களில் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுத்துவந்தோம.

அதில் மக்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டமாக ஆரம்பித்திருந்தோம். மக்கள் அதிகளவு ஆர்வத்துடன் இணைந்திருந்தனர். அத்துடன் 7 பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்சிகளை நடத்தியிருந்தோம்.

இச் செயற்பாட்டில் தண்டம் அறவிடும் முறையும் அமுல்படுத்தப்பட்டது. மேலும் பொலிஸாரின் ஒத்துழைப்பும் அதிகளவில் எமக்கு வழங்கப்பட்டிருந்தது.

யாழ்.மாநகர எல்லைக்குள் நாளொன்றுக்கு 106 தொன் திண்மக்கழிவுகள் உருவாகிறது. அதில் 82 தொன் திண்மக்கழிவுகள் மாநகர சபையால் சேகரிக்கபபடுகின்றன. அதில் 71 தொன் திணமக்கழிவுகள் உக்கக் கூடியதாகவும் மீதமுள்ள 11 தொன் திண்மக்கழிவுகள் மீள் சூழற்சிக்கு உட்படுத்த வேண்டியதும் அபாயகரமான இலத்திரனியல் கழிவுகள் சேர்ந்தவையாகவும் உள்ளது.

உக்கக்கூடிய திண்மக் கழிவுகளை காக்கைதீவில் உள்ள மீள்சுழற்சி நிலையத்துக்கு அனுப்புகிறோம். அதில் இருந்து இதுவரை ஏறத்தாழ 8 ஆயிரம் கிலோ கிராம் பசளை உற்பத்தி மேற்கொண்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்துள்ளளோம்.

மேலும் பிளாஸ்ரிக், பொலிதீன் மீள்சுழற்சி நிலையத்தில் மீள் சுழற்சிக்குட்படுத்தி அவற்றை தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்கிறோம்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் செயற்படுகளில் ஒன்றாக இலத்திரனியல் கழிவுகள் சேகரிப்பதற்கான ஏற்பாடு நடைபெற்றது. அதில் இருந்து மொத்தமாக 6 ஆயிரத்து 100 கிலோ கிராம் இலத்திரனியல் கழிவு சேகரிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான இந்த முன்னெடுப்பின் மூலம் பல விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன. அடுத்த ஆண்டில் இருந்து இச் செயற்பாடு மிக கூடுதலாக நடைபெறும். வர்த்தக நிலையங்கள் இச் செயற்பாட்டுக்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக வர்த்தக சங்கத்தின் ஊடாக அறிவித்துள்ளனர்.

இது ஒரு நல்ல ஆரம்பமாக உள்ளது. கழிவுகள் அகற்றப்படுவது பெரும் சவாலுக்குட்பட்ட விடயம். இவை முறையான விதத்தில் வெற்றிகரமாக செயற்பட்டு வரும் பட்சத்தில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆரம்பிக்கப்படும். எனவே அடுத்த வருடத்தில் இருந்து இச்செயற்பாட்டை முழுவீச்சில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளோம். இச்செயற்பாடு திண்மக்கழிவு முகாமைத்துவத்துக்கு வலுச்சேர்க்கும் நடவடிக்கை என்பது எமது நம்பிக்கையாகவுள்ளது.

தரம் பிரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளை பிரிப்பது சவாலான விடயம். அதை மாநகரசபை மட்டும் செயற்படுத்த முடியாது. எனவே பொதுத்தனியாருடைய பங்களிப்பு மிக அவசியம். தற்போது உள்ள மீள் சுழற்சி நிலையத்தை ஒரு தனியார் நிறுவனம் செயற்படுத்தி வருகிறது. இனி வரும் காலத்திலும் ஆர்வம் உள்ளவர்கள் மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு அச்செயற்பாட்டை மேற்கொளள முடியும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நல்லாட்சி அரசு உடைந்தால் ஐ.தே.கவுடன் ஆட்சியமைப்போம்

## அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு



தேசிய அரசாங்கத்தை கவிழ்த்து ஐக்கிய தேசியக் கட்சியை ஓரங்கட்ட நினைப்பார்களானால் ஐ.தே. கவுடன் இணைந்து புதிய அரசாங்கமொன்றை அமைக்க உதவி செய்வோம் என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றதை தொடர்ந்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி 105 ஆசனங்களை பெற்று வெற்றியீட்டியது. எனினும் ஐ.தே.கட்சி தனியாக அரசாங்கமொன்றை அமைக்காது ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைத்து கொண்டு செல்லும் போது அரசாங்கத்தில் இருக்கும் சில அமைச்சர்கள் ஐ.தே. கட்சி தொடர்பாக குறைகளை கூறி அரசாங்கத்தை கவிழ்க்க நினைக்கின்றார்கள்.

அப்படி நடந்து மீண்டும் மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வருவாராயின் அது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும். இந்த அரசாங்கத்தை கவிழ்க்க தற்போது சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அண்மையில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தை அமைக்க மகிந்த ராஜபக்ஷவின் உதவியை தேடுவதாக தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி, ஒவ்வொரு நாளும் அமைச்சர் டிலான் பெரேரா ஐக்கிய தேசிய கட்சிக்கு சேறு பூசி வருகின்றார்.ஐ.தே. கட்சிக்கு தனியாக அரசாங்கமொன்றை அமைப்பது பெரிய விடயமில்லை. விருப்பமில்லாதவர்கள் இந்த அரசாங்கத்தை விட்டு வெளியே செல்லலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# அரசிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி மீண்டும் பேரணி



## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டினை விற்கும் அரசாங்கத்திற்கு எதிராக மீண்டும் ஒரு பேரணியினை நடத்தத்தயார் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் நிதி மோசடி விசாரணை பிரிவில் தொடர்ச்சியாக 5 மணிநேர விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கமானது ஓய்வின்றி ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு அச்சுறுத்தலாக செயற்பட்டு வருகின்றது.

இதனை விடுத்து கொழும்பில் டெங்கு நுளம்புகளை அழிப்பதில் கவனம் செலுத்தி இருந்தால் 5,000 ற்கும் மேற்பட்ட மக்களை காப்பாற்றி இருக்கலாம்.

அது நாட்டிற்கு பயனான ஒன்றாக இருக்கும்.

மேலும் எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் இனவாதம் மற்றும் நாட்டினை விற்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக பேரணி ஒன்றினை நடத்த தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை நீதிமன்றத்தின் உத்தரவினால் நேற்று முன்தினம் நிதி மோசடி பிரிவில் விமல் வீரவன்ச முன்னிலையாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-3)

# எனது ஆட்சியில் அரிசி உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்திருந்தது



## மகிந்த ராஜபக்ஷ தற்புகழ்ச்சி

(கொழும்பு)

தமது அரசாங்க ஆட்சிக் காலத்தில் அரிசி உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்திருந்தது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரிசி விலை உயர்வு குறித்து கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரசாயனங்கள் மற்றும் நச்சுப் பொருட்கள் கலக்காத அரிசி வகைகளை உட்கொள்ளுமாறு அரசாங்கம் மக்களுக்கு ஆலோசனை வழங்கி வருகின்றது.

இந்த ஆலோசனை மிகவும் நல்லதொரு ஆலோசனையாகும்.

ஆனால் தரமான அரிசி என்றாலும் தரம் குறைந்த அரிசி என்றாலும் நியாயமான விலைக்கு இன்று சந்தையில் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இன்று வயல் வெளிகளில் மண் நிரப்பப்பட்டு கைத்தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன.

அரிசியின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இதனை கட்டுப்படுத்த அரசாங்கம் நெற் செய்கைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

எனது ஆட்சிக்·காலத்தில் இலங்கை அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்தது.

அரிசியின் விலை வானளவு உயர்ந்துள்ளது. மக்கள் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இரசாயனம் மற்றும் நச்சுப் பொருட்கள் அற்ற அரிசியை நுகருமாறு அரசாங்கம் கோருவது பாண் இல்லையென்றால் கேக் சாப்பிடுங்கள் என்பதற்கு நிகரான நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கையாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# அபிவிருத்தி விசேட சட்டமூல தோல்விக்கும் ஜனாதிபதிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

## சாந்த பண்டாரவின் கருத்தால் சந்தேகம்

மாகாண சபைகளில் அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தோற்கடிக்கப்படுவதன் பின்னணியில் ஜனாதிபதியோ அவரது தலையீடோ கிடையாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இளைஞர் முன்னணி தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சாந்த பண்டார தெரிவித்தார்.

இந்த சட்டமூலம் அவசர அவசரமாக சமர்ப் பிக்கப்பட்டது. அதிலுள்ள விடயங்களை அறிய மாகாண உறுப்பினர்களுக்கு அவகாசம் வழங்கப்படவில்லை. இந்த சட்ட மூலத்தினூடாக அதிக அதிகாரமுள்ள அமைச்சரொருவர் உருவாக்கப்படுவதாக பரவலாக குற்றஞ்சாட்டப்பட்டது. ஜனாதிபதியினதும் மாகாண சபைகளினதும் அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதாக ஊடகங்களில் சுட்டிக்காட்டப்பட்டது. பூரண தெளிவின்மை காரணமாக மாகாண சபைகளில் இந்த சட்ட மூலம் தோற்கடிக்கப்பட்டது. அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிக்கப்படுவதை சு.க. எதிர்க்கிறது. இந்த தோற்கடிப்பின் பின்னணியில் எந்த அரசியல் நோக்கமும் கிடையாது. எமது கட்சிக்கோ வேறு தரப்பினருக்கோ இந்த சட்ட மூலம் பற்றி தெளிவுபடுத்தப்படவில்லை.

இதனை தோற்கடிக்குமாறோ? வேண்டாமென்றோ? ஜனாதிப்தி எந்த ஆலோசனையும் வழங்கவில்லை. ஜனாதிபதி தனது அதிகாரங்களை குறைத்து வருகையில் ஓரிடத்தில் அதிகாரங்களை குவிப்பதை அனுமதிக்க முடியாது. சம்பந்தப்பட்ட அமைச்சர், மாகாண முதலமைச்சர்களையும் உறுப்பினர்களையும் அழைத்து இது பற்றி முதலில் தெளிவுபடுத்த வேண்டும். இந்த சட்டமூலத்தை இரத்து செய்யுமாறு நாம் கோரவில்லை. தேவையான திருத்தங்களை செய்து மீண்டும் மாகாண சபைகளின் அனுமதிக்கு முன்வைத்து அதனை நிறைவேற்ற முடியும்.

இந்த சட்ட மூலம் பற்றி அமைச்சரவையில் ஆராயப்பட்டாலும் அதன் உள்ளடக்கம்பற்றி அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தப்படவில்லை.



தனி நபருக்கு அதிகாரம் செல்வதை ஏற்க முடியாது. தெளிவின்மை காரணமாகவே மாகாண சபைகளில் இது தோற்றது. பேச்சுவார்த்தை மூலம் இதற்கு தீர்வு காணலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## உடம்பு ஈஸிசேர் கேட்கிறதா?

சௌகரியத்தில் தோய்ந்து எடுக்கப்பட்ட உடம்பு இது, அடிக்கடி அது சௌகரியத்தைத் தான் கேட்கும்.

அதற்கு நாம் அடிக்கடி செவி சாய்த்து விட்டோமானால் தொலைந்தது! கெட்டது காரியம்!

நிறையத் தூங்குவோம் என்று உடம்பு கேட்கும். சும்மா உட்கார்ந்த படி இருப்போமே, என்று சொல்லும். மனதுக்குப் பிடித்தமான பொழுதுபோக்குகளில் ஈடுபடச் சொல்லி நம்மைக் கட்டாயப்படுத்தி விடும்.

உடம்புக்கும் மனதிற்கும் இடையே நடக்கும் இந்தச் செல்லச் சண்டையில் நாம் உடம்பை வெல்வதற்கு அனுமதித்ததோமோ, தொலைந்தோம்.

இந்தியர்களின் சராசரி வயது ஐம்பத்தி ஐந்து என்கிறார்கள். அதாவது, இந்தியர்கள் ஓய்வு பெறும் வயதை விட அவர்கள் வாழும் வயது குறைவு.

அதிலும் நாற்பத்து ஐந்துக்கு மேல் உடம்பு நம் கட்டுப்பாட்டை மீறி விடுகிறது. சுகர் என்றும் பிரஷர் என்றும் அடிக்கடி படுக்க வைத்து விடுகிறது.

இந்தக் கால கட்டத்தில் ஒரு மனிதன் மிகவும் இதமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. உழைப்போம்,அலைவோம், திரிவோம் , சாதிப்போம் என்றெல்லாம் மனம் கிடந்து அடித்துக் கொள்ளும். ஆனால் உடம்போ ஒத்துழைக்காது.

பெரும்பாலானவர்களுக்குக்கல்விவாழ்க்கையிலேயே இருபது வருடங்கள் கழிந்து விடுகின்றன.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒரு மனிதன் உழைப்பதற்கும் உயர்வதற்கும் என ஆயுளில் 25 ஆண்டுகளே இருக்கின்றன. இந்தக் குறுகிய ஆண்டுகளில் எழுதப்படுவது தான் ஒவ்வொரு மனிதனின் வெற்றியின் சரித்திரம். இந்த ஆண்டுகளை எவன் ஒருவன் சரியான படி பயன்படுத்திக் கொள்கிறானோ, உடல் சுகத்தைப் பெரிதாக எண்ணாமல் எவன் ஒருவன் உழைப்பிலும் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்துகிறானோ அவன் தான் தன் வாழ்நாளில் மீதமிருக்கும் ஆண்டுகளை நிம்மதியாகக் கழிக்கிறான். இந்தக் காலத்தைக் கோட்டை விட்டுவிட்டால் கஷ்டம் தான்.

50 வயதிற்கு மேலும்– ஏன் 60 முதல் 70 வயதிலும் சுடச் சுறுசுறுப் பாகச் சம்பாதிக்கிறவர்களும் முன்னேறுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட வாய்ப்பும் உடல் நலமும் எல்லோருக்கும் அமைந்துவிடுவதில்லை. அபூர்வம்.

ஆக, உடம்பு ஈஸி சேர் கேட்குமுன் சாதிக்க வேண்டியவற்றைச் சாதிப்போம்.

மழைக்காலம் வருவதை அறிந்து தன் முட்டைகளை மேட்டு நிலத்தில் கொண்டு சேர்க்கும் எறும்பைப் போல் நாம் வர விருக்கும் இடர்களை மனதில் நிறுத்தி இப்போதே முன்னேற்றப்பாடுகளைச் செய்ய ஆரம்பிப்போம்.

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்




மீண்டும் ஒரு பழங்குடி சொல்லாடலில் இருந்தே தொடங்குகிறேன். "உங்களது ஆழ்மனது விருப்பங்



கள் தான் உங்களை இயக்குகிறது. அதுதான் உங்கள் ஆளுமையை தீர்மானிக்கிறது. ஆழ்மனது விருப்பங்கள் விளக்கு அல்ல... அது தான் பாதை" - இது பரம்பிக்குளம் பகுதியில் நான் சந்தித்த பழங்குடி ஒரு மிக நீண்ட உரையாடலுக்குப் பின் கூறியது. இந்த சொல்லாடல் மிகச் சரியாக ஜெயலலிதாவுக்கு பொருந்திப் போகிறது. ஆம், ஜெயலலிதாவுக்கு எப்போதுமே அரசியல் மீது ஆழ்மனதில் விருப்பம் இருந்திருக்கிறது. அந்த விருப்பம்தான் அவரை இயக்கி இருக்கிறது. அதுதான் அவர் ஆளுமையை வடிவமைத்திருக்கிறது. அந்த விருப்பம் அமைத்துக் கொடுத்த பாதையில் பயணித்துத் தான் அரசியலில் அவர் இந்த உயரங்களைத் தொட்டு இருக்கிறார்.

அவர் நடிக்கத் தொடங்கிய காலத்தில் அளித்த ஒரு பேட்டியில், "நான் சினிமாவுக்கு வராவிட்டால், அரசியலுக்குத் தான் வந்திருப்பேன்..." என்றார். சினிமாவில் பிஸியாக இயங்கியபோதும் அரசியல் மீதான அவரது காதல் உயிரப்புடன் தான் இருந்திருக்கிறது. 'நீங்கள் அரசியலில் முழு மூச்சுடன் ஈடுபடப் போவதாகக் கேள்விப்பட்டோம் உண்மையா...?' என்று நேர்காணலில் கேட்கப்பட்ட கேள்விக்கு எந்த மழுப்பலும் இல்லாமல் இவ்வாறாக பதில் அளித்திருக்கிறார்.

"நாள்தோறும் படப்பிடிப்பு, உடற்பயிற்சி, நாட்டியப் பயிற்சி இவற்றை எல்லாம் முடிப்பதற்குள் பாதி மூச்சு காணாமல் போய் விடுகிறது. இன்னும் இதற்கு மேல் 'தம்' சேர்த்துக் கொண்டு முழு மூச்சுடன் அரசியலில் குதிக்க எவ்வளவு காலம் ஆகுமோ?" என்று தன் அரசியல் அபிலாஷைகளை நயமாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

### அமெரிக்காவில் நிகழ்ந்த சந்திப்பு!

நாம் ஏற்கெனவே பார்த்தோம் தானே... எம்.ஜி. ஆருக்கும் - ஜெயலலிதாவுக்கும் அவ்வப்போது மனக்கசப்புகள் வருமென்று...! எழுபதுகளின் மத்தியில் எழுந்த கருத்து வேறுபாடு, ஒரு பெரிய இடைவெளியையே இருவருக்கும் மத்தியில் ஏற்படுத்தி இருக்கிறது.

அந்த காலகட்டத்தில் அவர்கள் நடித்த படங்களை பார்த்தாலே இது புரியும். ஜெயலலிதா அவன் தான் மனிதன், சித்ரா பௌர்ணமி என நடித்துக் கொண்டிருக்க.... எம்.ஜி.ஆர்., உரிமைக்குரல், உலகம் சுற்றும் வாலிபன் என வெவ்வேறு கதாநாயகிகளுடன் நடித்துக் கொண்டிருந்தார்.

அந்த சமயத்தில் அவர்களுக்கு நெருக்கமாக இருந்தவர்கள், இருவரும் பிரிந்து விட்டார்கள் என்று தான் நம்பினார்கள். ஆனால், அனைவரும் ஆச்சரியப்படும் படி இருவரும் மீண்டும் இணைந்தார்கள். இருவருக்கும் இருந்த நட்பு முன்பை விட இன்னும் இறுக்கமானது.

எப்படி இது நிகழ்ந்தது? என்று அனைவரும் குழம்பிக் கொண்டிருக்க... இருவருக்கும் நெருக்கமானவர்களுக்கு மட்டும் தெரிந்திருக்கிறது, அமெரிக்காவில் நிகழ்ந்த ஒரு சந்திப்பு தான் இதற்குக் காரணமென்று. ஆம், எம்.ஜி.ஆர்., அப்போது ஒரு பணியாக அமெரிக்கா சென்றிருந்தார். அதேசமயத்தில் ஜெயலலிதாவும்...! காஷ்மீர் செல்லும்போது இருவரும் எதேச்சையாக ஒரே விமானத்தில் சென்றார்களே...? அது போல எதேச்சையான சந்திப்பா என்றெல்லாம் தெரியாது. ஆனால், அந்த சமயத்தில் ஜெயலலிதா அமெரிக்காவில் உடல்பருமனை குறைப்பதற்கான சிகிச்சைக்காக சென்று இருந்திருக்கிறார். அங்கு இருவருக்கும் பொதுவான நண்பர்கள் சிலர் இருவரையும் சந்திக்க வைத்திருக்கிறார்கள். மனம் விட்டு இருவரும் அங்கு வெகுநேரம் பேசியிருக்கிறார்கள். இந்த சந்திப்பு இருவருக்குள்ளும் இருந்த கருத்து வேறுபாடுகள் களைய காரணமாக இருந்திருக்கிறது. இந்தச் சந்திப்புக்குப் பின்தான் ஜெயலலிதா அ.தி.மு.கவில் இணைந்தார்... பொறுப்புக்கு வந்தார், ராஜ்யசபா எம்.பி ஆனார். ஆனால், இதை கட்சியில் அப்போது எம்.ஜி.



ஆருக்கு அடுத்த நிலையில் இருந்தவர்கள் ரசிக்கவில்லை... இருவரையும் மீண்டும் பிரிக்க ஒரு வாய்ப்புக்காக காத்திருந்தார்கள். அந்த வாய்ப்பை ஜெயலலிதாவே ஏற்படுத்தியும் தந்தார்.

### மீண்டும் முளைத்த கருத்து வேறுபாடு!

1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி ராஜ்ய சபா உறுப்பினராக ஜெயலலிதா நியமிக்கப்பட்டார். அவருக்கு ராஜ்யசபாவில் ஒதுக்கப்பட்ட இருக்கை 185. இதில் என்ன முக்கியத்துவம் இருக்கிறது என்கிறீர்களா...? இதே இருக்கை தான் 1963ஆம் ஆண்டு, அண்ணாதுரை எம்.பியாக இருந்தபோது ஒதுக்கப்பட்டு இருந்தது. இருக்கை மட்டும் ஒன்று போல இருக்கவில்லை... ஆங்கிலப் புலமையும் ஒன்றுபோலத் தானே இருந்தது.

அந்தப் புலமைதான் ஜெயலலிதாவுக்கு உதவியது. சரளமான ஆங்கிலத்தில் பேசி அங்கு எல்லோரையும் திகைக்க வைத்தார். அது மட்டுமல்லாமல் ஹிந்தியும் அவருக்கு கை கொடுத்தது.

ஹிந்தியை தீவிரமாக எதிர்த்த பகுதியிலிருந்து வந்த ஒருவர் சக வட இந்திய எம்.பிக்களுடன் அவர்களது மொழியில் பேசியது, அவர்களுக்கு இவரை நெருக்கமாக்கியது. "நான் அழகும் அறிவும் ஆற்றலும் ஒரே இடத்தில் இருப்பதைக் காண்கிறேன்" என்று அந்த சமயத்தில் எம்.பியாக இருந்த குஷ்வந்த் சிங் மனம்விட்டு புகழவும் செய்தார். இந்த மொழி ஆற்றல் ஜெயலலிதாவை இந்திரா காந்தியிடம் நெருக்கமாக்க உதவியது.



அந்த சமயத்தில் காங்கிரஸ், தி.மு.கவுடன் கூட்டணி வைத்திருந்தது. எம்.ஜி.ஆர். அந்தக் கூட்டணியை பிரித்து காங்கிரசுடன் கூட்டணி வைக்க விரும்பினார். எவ்வளவு முக்கியமான விடயம் இது....? இது குறித்துப் பேச அவர் அனுப்பியது ஜெயலலிதாவை. ஆம், அந்தளவுக்கு அப்போது ஜெயலலிதா கட்சியிலும் மத்தியிலும் செல்வாக்காக இருந்தார். சரி விடயத்துக்கு வருவோம். இந்திரா காந்தி இந்த பேச்சுவார்த்தைக்காக ஒதுக்கியது வெறும் பத்து நிமிடங்கள் தான்.

ஆனால், ஜெயலலிதாவின் சாதுர்யத்தால் அந்தப் பேச்சுவார்த்தை முப்பது நிமிடங்கள் வரை நீண்டது. இந்திரா காந்தி முழுவதுமாக ஜெயலலிதாவின் பேச்சால் கவரப்பட்டு இந்தக் கூட்டணி குறித்து பேச ஜி.கே. மூப்பனாரை அனுப்பி வைத்தார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது ஜெயலலிதாவின் உதவிக்காக அனுப்பி வைக்கப்பட்ட பத்திரிகையாளர் சோலையும் உடன் இருந்தார்.

பேச்சுவார்த்தை முடிந்து வெளியே வந்த போது, இது குறித்து உடனே எம்.ஜி. ஆருக்கு தகவல் கூறச் சொல்கிறார். சொல்லி விடுகிறேன் என்று சொன்ன ஜெயலலிதா சொல்லவே இல்லை.

விமானத்தில் வரும் போது மீண்டும் சோலை கேட்கிறார், "தலைவரிடம் சொல்லி விட்டீர்களா...?". ஜெயலலிதா மிக அலட்சியமாக, "நாம் தான் அவரை நேரில் சந்திக்கப் போகிறோமே... அப்போது சொல்லி விடலாம்" என்கிறார். ஆனால், அப்போது இந்த பேச்சுவார்த்தை குறித்த தகவலுக்காக மிகவும் ஆவலுடன் காத்திருந்த எம்.ஜி.ஆருக்கு இன்னும் தகவல் வராதது எரிச்சலூட்டுகிறது... சென்னை வந்த பின், ஜெயலலிதா டில்லியில் நடந்த விடயங்களை பகிர்கிறார்.

ஆனால், இப்போது அந்த விடயத்தை விட, ஏன் டில்லியிலிருந்தே இந்த விடயத்தை பகிரவில்லை..? என்ற கோபம் பிரதானம் ஆகிறது.

இந்த விரிசலுக்காக காத்திருந்த கட்சியின் மூத்த தலைவர்கள்... ஜெயலலிதாவுக்கு எதிராக தூபம் போடுகிறார்கள்... அந்த புகைமூட்டம் விரைவில் ஜெயலலிதா - எம்.ஜி.ஆருக்கு இடையே மீண்டும் ஒரு இடைவெளியை உண்டாக்குகிறது. (தொடரும்)

# அரசாங்கத்தை இரண்டாக உடைக்கும் வேலையைத்தான் டிலான் செய்கிறார்

## அமைச்சர் மனோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைபதவிக்குகொண்டு வர, முற்போக்கு சக்திகளுடன் தானும் பெரும் பங்காற்றியுள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக வந்தவர்கள் பாவம் செய்த, புண்ணியத்திற்கு அமைச்சரானவர்கள் என அண்மையில் அமைச்சர் டிலான் பெரேரா கூறியிருந்தார். இந்த கதை புண்ணியத்தில் அமைச்சரான டிலான் பெரேராவுக்கே பொருந்தும். நான் தேர்தலில் வெற்றி பெற்று மக்களின் வாக்குகளில் வந்தவன் எனவும் மனோ கணேசன் இதன் போது கூறினார்.

மேலும், ஞானசார தேரர், விமல் வீரவன்ச மற்றும் கம்மன்பில ஆகியோர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தும் டிலான் பெரேரா, அவர்களுக்கு தேவையானவற்றையே நிறைவேற்றி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தை இரண்டாக உடைக்கும் வேலையையே அமைச்சர் டிலான் பெரேரா செய்து வருவதாகவும் அமைச்சர் மனோ கணேசன் இதன் போது குற்றம் சுமத்தியுள்ளார். (இ-3)

# சிறு கட்சிகளை உருவாக்க ஐ.தே.க. இரகசியத்திட்டம்

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்வதற்கான புதிய கட்சிகளை உருவாக்கும் முயற்சியில் ஐ.தே.க. ஈடுபட்டுள்ளதாக அக்கட்சியின் உள்வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இதன்படி, மறைந்த காமினி திஸாநாயக்க மற்றும் லலித் வீரதுங்க ஆகியோரினால் உருவாக்கப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை மீண்டும் செயற்படுத்த தயாராகி வருவதாக கூறப்படுகின்றது. இக்கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும், மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிடுவதென அக்கட்சியின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்துள்ளது.

இக்கட்சி மீள் ஆரம்பிக்கப்படுவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் மொரடுமுள்ள பிரதேசத்திலுள்ள, அதன் தற்போதைய. செயலாளரின் வீட்டில் ஐ.தே.க.வின் சிரேஷ்டமானவர்களுடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இக்கட்சியை தனியாக இயக்கி, ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்த்துக் கொள்வதற்கு ஐ.தே.கவின் உயர் பீடம் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சிறிய கட்சிகள் பல எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஸ்ரீல.சு.கவுடனும், மகிந்த ராஜபக்ஷ சார்பு குழுவுடனும் கூட்டுச் சேர்ந்துள்ளதனால், புதிய சிறு கட்சிகளையும், அரசியல் அமைப்புக்களையும் உருவாக்கி தம்முடன் இணைத்துக் கொள்வதற்கு ஐ.தே.க. திட்டமிட்டுள்ளதாகவும் அக்கட்சியின் உள்ளக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (இ-3)

# உத்தேச யாப்பிலுள்ள முரண்பாடுகளை தீர்க்க அஸ்கிரிய மகாநாயக்கர் முயற்சி

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில், ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட மல்வத்து அஸ்கிரிய பிரிவின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் தீர்மானித்துள்ளார்.

உத்தேச அரசியல் யாப்பு தொடர்பில் நாட்டு மக்கள் தெளிவின்றி இருப்பதாகவும் மகாநாயக்க தேரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குளோபல் இலங்கை ஒன்றிய அமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று அஸ்கிரிய மகாநாயக்க தேரரை சந்தித்த போது இதனைக் கூறியுள்ளார். (இ-3)



யாழ்.கரவெட்டி முன்பள்ளியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ், நெல்லியடி வர்த்தக சங்கச் செயலாளர் சுரேரஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 942

ராஜ்




தர்மினி




சர்மி




சிந்து

சைக்கிளில் வந்தேன் Hi என்றாள்
பைக்கிளில் வந்தேன்
How Are You என்றாள்
காரில் வந்தேன்
I Love You என்றாள்
அனைத்தும் வாடகை என்றேன்
Good Bye என்றாள்

பரதன்




தர்மா





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அம்மா இடத்தில் சின்னம்மா

# அ.தி.மு.க. தலைமைப் பொறுப்பு சசிகலாவிடம் நேற்று ஒப்படைப்பு

## கண்ணீர் விட்டார் முதல்வர் ஓ.பி.எஸ்.







அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில், அக்கட்சியின் தலைமை பொறுப்பு சசிகலாவிடம் ஒப்படைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி திருமண மண்டபத்தில் தொடங்கியது.

இந்தப் பொதுக்குழு கூட்டத்தில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனை எடப்பாடி பழனிச்சாமி முன்மொழிந்தார்.

ஜெயலலிதாவின் நினைவைப் போற்றும் வகையில் ஜெயலலிதாவின் இருக்கை அரங்கில் வைக்கப்பட்டது.

முதலமைச்சர் ஓ.பி.எஸ் பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கண்ணீர் மல்க உரையாற்றினார்.

முன்னதாக வி.கே.சசிகலாவிடம் தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப்படுவதற்கான தீர்மானம் முன்மொழியப்பட்டது.

சசிகலாவின் தலைமைக்கு விசுவாசத்துடன் பணியாற்ற பொதுக்குழு உறுதியேற்கிறது எனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை வழிமொழிந்து பொதுக்குழு உறுப்பினர்கள் இசைவு தெரிவித்தனர்.

**ஜெயலலிதாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு**

எல்லோருக்கும் எப்பொழுதும் சத்தான உணவு என்பது சாத்தியமான இலட்சியமே என்பதை மெய்ப்பித்த முதலமைச்சர் அம்மாவுக்கு, மானுட சேவைக்கான பிலிப்பைன்ஸ் நாட்டின் ரமோன் மக்சையாய் விருது மற்றும் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட ஏற்பாடுகளை செய்தல் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**அ.தி.மு.க. பொதுக்குழு தீர்மானங்கள்**

◆ முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம்.

◆ சசிகலாவின் தலைமையின் கீழ் விசுவாசத்துடன் பணியாற்ற உறுதி ஏற்று தீர்மானம்.

◆ முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளை "தேசிய விவசாயிகள் தினம்" என்று அறிவிக்கவும். நாடாளுமன்றத்தில் ஜெயலலிதாவின் வெண்கலச் சிலையை நிறுவவும் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்து தீர்மானம்.

◆ ஜெயலலிதாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க மத்திய அரசுக்கு கோரிக்கை முன்வைத்து தீர்மானம்.

◆ ஜெயலலிதாவுக்கு மானுட சேவைக்கான பிலிப்பைன்ஸ் நாட்டின் ரமோன் மகசசே விருது மற்றும் உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என தீர்மானம்.

◆ எம்.ஜி.ஆர். நூற்றாண்டினை மக்கள் பணி ஆண்டாக அனுசரிக்க தொணடர்களுக்கு அழைப்பு விடுத்து தீர்மானம்.

◆ ஒவ்வோர் ஆண்டும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினத்தன்று அ.தி.மு.க. தொண்டர்கள் ஒன்றுகூடி கழக ஒற்றுமைக்கு உறுதியேற்பர்.

**பொதுச்செயலாளராக சசிகலா நியமனம்**

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக கட்சியின் சட்ட திட்ட விதிகளுக்கு உட்பட்டு சசிகலா நியமனம் செய்யப்பட்டுள்ளதாக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி மற்றும் தம்பிதுரை ஆகியோரும் போயஸ் தோட்டத்துக்கு சென்று சசிகலாவை சந்தித்து தீர்மானத்தை வழங்கினர்.

பொதுக்குழு தீர்மானத்தை சசிகலா கண்ணீர் மல்க வாங்கியுள்ளார்.

மேலும் அ.தி.மு.க. பொதுச செயலாளரர்க முழுமனதுடன் சசிகலா சம்மதம் தெரிவித்துள்ளார் என்றும் பொதுக்குழு தீர்மானம் சசிகலாவிடம் அளிக்கப்பட்டது என்றும் ஓ.பி.எஸ் தெரிவித்துள்ளார். (இ-7)

# நிரந்தர பொதுச்செயலாளர் என்ற முறையே அ.தி.மு.கவில் இல்லை

## பொன்னையன் பேட்டி



ஜெயலலிதாவை பாசத்தின் அடிப்படையில் தான் நிரந்தர பொதுச்செயலாளர் என்று அழைத்தோம் என்றும், நிரந்தர பொதுச்செயலாளர் என்ற விதி முறையே கட்சியில் இல்லை என்றும் பொன்னையன் தெரிவித்தார்.

சென்னையில் அ.தி.மு.க. செய்தித் தொடர்பாளர் பொன்னையன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு.

கேள்வி:-முதலமைச்சர் ஜெயலலிதா உயிரோடு இருந்தபோது அவரை தொண்டர்கள், நிர்வாகிகள் எல்லோரும் நிரந்தர பொதுச்செயலாளர் என்று அழைத்தார்களே? நிரந்தர பொதுச்செயலாளர் என்ற விதி முறையில் மாற்றம் செய்யப்படுமா?

பதில்:- அ.தி.மு.க. சட்ட திட்ட விதிமுறைகளில் 'நிரந்தர பொதுச்செயலாளர்' என்ற முறையே இல்லை. பொதுச்செயலாளர் தான். நாங்கள் மறைந்த முதலமைச்சரை பாசத்தின் மிகுதியால் அவ்வாறு அழைத்தோம். கடந்த காலங்களில் பொதுச் செயலாளராக நெடுஞ்செழியன், எம்.ஜி.ஆர். ஆகியோர் இருந்து இருக்கிறார்கள். எனவே அது பிரச்சினை இல்லை.

கேள்வி:-பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டி இருக்கிறதா?

பதில்:-பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டியே இல்லை. இதுவரை யாரும் மனுக்கள் கொடுக்கவில்லை. பொதுச்செயலாளரை பொதுக்குழுவே தேர்ந்தெடுக்கும். பொதுக்குழு நடத்த தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

கேள்வி:- பொதுக்குழுவுக்கு சசிகலா வருவாரா? அவர் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்படுவாரா?

பதில்:- அவர் வருவதில் என்ன தடை இருக்கிறது? அ.தி.மு.கவில் அனைத்து அமைப்புகளும் சசிகலா பொதுச்செயலாளராக வர வேண்டும் என்று தான் விருப்பம் தெரிவித்து இருக்கிறது.

இவ்வாறு அவர் பதிலளித்தார். (இ-3)

## லஷ்கர்-இ-தொய்பாவின் மாணவர் பிரிவை தீவிரவாத அமைப்பாக அறிவித்தது அமெ.



(வோஷிங்டன்)

லஷ்கர்-இ- தொய்பா வின் மாணவ்ர் பிரிவான அல்-முகம்மதியாவை தீவிரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்துள்ளது. பாகி ஸ்தானை மையமாகக் கொண்டு லஷ்கர்-இ-தொய்பா அமைப்பு செயறபடுகிறது. இதன் மாணவர் பிரிவாக அல்-முகம்மதியா அமைப்பு உள்ளது.

இந்நிலையில், அல்-முகமமதியாவை ஒரு தீவிரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அதே போல் அதன் மூத்த தலை வர்கள் முகமது சர்வார் மற் றும் ஷகித் முகமது ஆகியோரை சர்வதேச பயங்கரவாதிகளாக அமெரிக்கா அறி வித்துள்ளது. இருவரும் பாகி ஸ்தானில் இருந்து செயற்படுகிறார்கள். இது தொடர்பாக அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

லஷ்கர்-இ-தொய்பா அமைபு 2009ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இதில் அதன் முன்னதாக லஷ்கர்-இ-தொய்பா கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்காவால் தீவிரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு வெளியிட்டது முதல் எல்.இ.டி. அமைப்பானது தடைகளில் இருந்து தப்பிக்க தொடர்ச்சியாக தனது பெயரை மாற்றிக் கொண்டே வந்தது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. (இ-7)

# பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் வெற்றிடம் நிலவும் மனைப் பொருளியல் பாடத்திற்கும், சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் வெற்றிடம் நிலவும் 13 வகையான பாடங்களுக்கும் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு நியமிப்பதற்காக 2016.12.15 ஆம் திகதி வட மாகாண கல்வி அமைச்சில் நடைபெற்ற நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்குத் தோற்றி தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2017.01.02 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

எனவே தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள்(பெண்கள் இள வர்ண சாறியுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேட்டும் அணிந்து குறித்த திகதியில் தவறாது வட மாகாண கல்வி அமைச்சிற்கு சமுகமளித்து தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

மேலும் தெரிவு செய்யப்பட்ட 70 பட்டதாரிகளுக்கும் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அழைப்புக் கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

# தேர்தலை பிற்போடுவதற்கு எதிராக கபே அமைப்பு வழக்குத் தாக்கல்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எல்லை நிர்ணயக்குழு மற்றும் மாகாண சபைகள் அமைச்சு என்பவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக கபே அமைப்பு அறிவித்துள்ளது.

அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் இதனை தெரிவித்துள்ளார்.

தேர்தலை பிற்போட்டு வரும் மோசடி மிக்க நடவடிக்கைக்கு எல்லை நிர்ணயக் குழு ஆதரவு வழங்கி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை அமைச்சுக்கு வழங்குவதற்கு தீர்மானமாகியிருந்த போதிலும் அது ஒப்படைக்கப்படுவதற்கு தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார். (இ-3)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் 2017 ஆம் ஆண்டு தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவர்கள் இக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இக் கற்கை நெறிகளாவன, மீன் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவம் (NVQ3-5), நீச்சல்பயிற்சிநெறி, கடலக மாலுமி பயிற்சி நெறி (NVQ-4), வெளி இணைப்பு இயந்திர தொழில் நுட்பம் (NVQ -3), கணனி பிரயோக உதவியாளர் (NVQ) என்பனவாகும்.

இக் கற்கை நெறி களைக் கற்க விரும்புபவர் கள் உரிய விண்ணப்பப் படி வங்களை 2 ஆம் குறுக்குத் தெரு, குரு நகர், யாழ்ப்பா ணம் எனும் முகவரியிலுள்ள இலங்கை சமுத்திர பல்கலைக் கழகத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தக வல்களுக்கு 021 738 8188, 071 834 9073 ஆகிய தொலைபேசி இலக்கங்க ளுடன் தொடர்பு கொள்ள முடி யும் என உவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# அடாவடித் தனங்களின் மூலம் அதிகாரங்களைப் பெறமுடியாது

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் அதிகாரங்களையும் பதவிகளையும் அடாவடித தனங்கள் மூலமோ சமூகத்திற்கிடையே குழப்பங்களை ஏற்படுத்தியோ ஒருபோதுமே பெறுக் கொள்ள முடியாதெனவும அது இறைவனால்வழங்கப்படுகின்ற அருட்கொடையெனவும அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

பிரபல தொழிலதிபர் ஜிப்ரியை மக்கள் காங்கிரசில் இணைகும் நிகழ்வும் மீனவ சமூகத்திற்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் புத்தளம் கடற்கரைப் பள்ளி வாசல் முன்றலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் அதிகாரம் ஜனநாயக வழியில் பெறப்பட வேண்டிய ஒன்று. அடித்து நொறுக்கி அபாண்டங்களைக் கூறி பழிகளைச் சுமத்தி அதனைப் பெற்றுக் கொள்ளலாமென நினைப்பது மடைமைத்தனமாகும்.

கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக புத்தளம் தொகுதி அரசியல் அதிகாரத்தை இழந்து நிற்கின்றது. இதனால் இங்குள்ள மக்கள் தவிக்கின்றனர். பிரிவும் பிளவும் ஒற்றுமையீனமுமே இந்தப் பிரதிநிதித்துவத்தை நாம் இழந்து நிற்பதற்கு பிரதான காரணம்.

புத்தளத்தின் அரசியல் அதிகாரம் அற்றுப்போனதால் நாம் கையறு நிலையில் இருக்கின்றோம். இந்த மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் நடப்பதற்குப் பதிலாக இங்குள்ள மக்களை பாதிப்புக்குள்ளாக்கும் செயற்றிட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன. இருக்கும் கட்டடங்களும் நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலையையே காண்கின்றோம்.

ஏற்கனவே அனல் மின் நிலையத்தின் தாக்கத்தினால் பல்வேறு பாதிப்புக்களை அனுபவித்து வரும் எங்கள் மீது இப்போது குப்பைகளையும் கொட்டத் துடிக்கின்றார்கள். கொழும்புக் குப்பைகளை புத்தளத்தில் கொட்ட எடுக்கும் அவசரமான முயற்சிகளுக்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை.

பாராளுமன்றத்திலும் உயர் மட்டத்திலும் இது தொடர்பான எமது தெளிவான நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ளோம். மேற்கொண்டு இத்திட்டத்தை முன்னெடுத்தால் அதனை தீவிரமாக தடுத்து நிறுத்துவோம். இதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அமைச்சரவையின் ஓர் அங்கமாக இருந்து கொண்டு அரசின் தீர்மானங்களை எதிர்ப்பதென்பது எல்லோருக்கும் முடியாத ஒன்று. எனினும் எம்மைப் பொறுத்தவரையில் நேர்மையாகவும் துணிவாகவும் குப்பைகளை புத்தளத்திற்கு கொண்டுவர வேண்டாமென காட்டமாகக் கூறியிருக்கின்றோம். அதையும் மீறினால் இந்த விடயத்தை வித்தியாசமாக அணுகுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் வேலைத்திட்டத்தை விரிவுபடுத்த உலகவங்கியுடன் கடன் ஒப்பந்தம்

சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் வேலைத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திற்கும் இடையில் கடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச். எஸ் சமரதுங்கவும் உலக வங்கியின் சார்பில் இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் ஐடாஸ் சுவராயி றிட்டிகோவும் கைச்சாத்திட்டனர்.

இது தொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் நிதியமைச்சில் இடம்பெற்றது.

இந்த நிதி உதவியின் கீழான வேலைத்திட்டம் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

சமநிலை மேம்படுத்துதல் நாட்டின் சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னலை விதிகளுக்கமைவாக முன்னெடுத்தல். அதன் செயற்பாடுகளை சிறப்பான முறையில் செயற்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக குறைந்த வருமானத்தை கொண்ட பொது மக்கள் இதன் மூலம் நன்மைகளை பெற்றுக்கொள்வர்.

நிதியமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தில் ஏனைய நிறுவனங்களும் இணைத்துக்கொள்ளப்படும்.

இந்த உத்தேச வேலைத்திட்டத்திற்கான மொத்த செலவு 75 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்த நிதியை உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் வழங்குகின்றது. இந்த நிதி உதவியை 5 வருடத்தில் நிவாரண வட்டியின் கீழ் செயற்படுத்தவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# பேருந்துச் சேவை நேர மாற்றம்

எதிர்வரும் 2.01.2017 ஆம் திகதி முதல் பாடசாலைகள் 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதால் 01.01.2017 ஆம் திகதி முதல் கீழ்வரும் பாதைகளில் சேவையாற்றும் பேருந்துகளில் நேர மாற்றம் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபை (வடக்கு) பருத்தித்துறை முகாமையாளர் க.கந்தசாமி அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை - சாவகச்சேரி- 765 பாதையால் - பழைய நேரம்-0645 புதிய நேரம்-0615 மணி

பருத்தித்துறை- கேவில் - 762 பாதையால் பழைய நேரம்- 06.30 புதிய நேரம்-05.45 மணி

பருத்தித்துறை - பொற்பதி 762/2 பாதையால் பழைய நேரம்- 07.15 புதிய நேரம்- 7 மணி

பருத்தித்துறை - வட்டுக்கோட்டை 766 பாதையால் பழைய நேரம் -06.20- புதிய நேரம்- 6 மணி

பருத்தித்துறை- நவாலி - 767 பாதையால் பழைய நேரம்-07.00- புதிய நேரம் -6.45 மணி

பருத்தித்துறை - மணற்காடு - 762/2 பாதையால் பழைய நேரம்-07.15 புதிய நேரம்-6.45 மணி


கல்லுவம் - பருத்தித்துறை - 757/1 பாதையால் 6.30 மணி பாடசாலை சேவை மட்டும்

யாக்கரு- பருத்தித்துறை - 754/1 பாதையால் 6.30 மணி பாடசாலை சேவை மட்டும்

குடவத்தை - பருத்தித்துறை 759/1 பாதையால் 6.30 மணி பாடசாலை சேவ்வ மட்டும்

தொண்டைமானாறு - பருத்தித்துறை - 752/1 பாதையால் 6.30 மணி பாடசாலை சேவை மட்டும்

பிற்பகல் வழமை போல் 1.30 மணிக்கு பாடசாலை சேவை நடைபெறும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)



நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் கலாசார விழா அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிப் பொருட்களை வழங்கி வைப்பதனையும் அருகில் பிரதேச செயலர் சி.ஜெயகாந் நிற்பதையும் படங்களில் காணலாம்.





# தங்க மஞ்சள் குருவி!

...அவர் அரசரிடம், "என்ன சொல்வேன் அரசே! அதிசயமான கதை நடந்து விட்டது. அந்தக் குருவி கையில் கிடைத்து விட்டது. நானும் அதைக் கூண்டில் அடைத்து விட்டேன்.

அதை இங்கு எடுத்து வரும்போது, அது தனது மாயமான ஏழு இறக்கைகளை விரித்துப் பறந்து சென்று விட்டது.

காட்டில் அதைத் துரத்திக் கொண்டு வெகுதூரம் சென்று விட்டேன். அது மீண்டும் என் கையில் சிக்கவில்லை" என்றார்.

தொடர்ந்து, சற்று தூரத்தில் பறந்து சென்றவாறே அது என்னிடம் சொல்லிற்று, "அரசரிடம் போய்ச் சொல்... காலையாகிற போதோ அல்லது இரவாகிறபோதோ அல்லது நடுப்பகல் ஆகிறபோதோ, வெளிச்சமோ இருட்டோ இல்லாத போது, நானே எனது ஏழு இறக்கைகளால் பறந்து, திரும்ப வந்து விடுகிறேன்... என்றது" என்றார்.



அதைக் கேட்டதும் அரசருக்கு மட்டுமல்ல, அண்டை நாட்டு மன்னர் விஜயவர்தனருக்கும் தலை சுற்றியது.

அப்படிப்பட்ட சமயம் எங்கு உண்டாகும்? "காலை ஆகாமல், நடுப்பகல் ஆகாமல், இரவு ஆகாமல் வெளிச்சம், இருட்டு ஆகும் சமயம் எது?" என்று அனைவரும் வியப்படைந்தனர்.

அதைக் கேட்டு விஜயவர்தனர், அரசர் இருவரும் சிரித்து விட்டனர்.

விஜயவர்தனர் சொன்னார், "தெனாலியின் சாதுரியம் பற்றி இதற்கு முன்பு கேள்விப்பட்டுள்ளேனே தவிர, இப்போது தான் நேரில் பார்த்தேன்..." என்று புகழ்ந்தார்.

(முற்றும்)

## 12.2016 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1862 - வட கரொலைனாவில் ஐக்கிய அமெரிக்காவின் மொனிட்டர் என்ற கப்பல் மூழ்கியது.
- 1870 - ஸ்பெயின் பிரதமர் ஜுவான் பிறிம் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1880 - டிரான்ஸ்வால் குடியரசு ஆகியது.
- 1903 - சிக்காகோவில் நாடக அரங்கு ஒன்றின் இடம்பெற்ற தீயினால் 600 பேர் இறந்தனர்.
- 1906 - அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சி டாக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1922 - சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்பட்டது.
- 1924 - யாழ்ப்பாணம் வாலிபர் சங்க மாநாட்டில் சாதி ஒழிப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.
- 1924 - பல நாள்மீன்பேரடைகளின் இருப்பு பற்றி எட்வின் ஹபிள் அறிவித்தார்.
- 1941 - மகாத்மா காந்தி காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகினார்.
- 1943 - சுபாஷ் சந்திர போஸ் அந்தமான் தீவுகளின் போர்ட் பிளையர் நகரில் இந்திய விடுதலைக் கொடியை ஏற்றினார்.
- 1947 - ருமேனியாவின் மன்னர் மைக்கல் சோவியத் ஆதரவு கம்யூனிச அரசால் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1949 - இந்தியா சீனாவை அங்கீகரித்தது.
- 953 - உலகின் முதலாவது NTSC வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கூ.1,175.00 விலைக்கு விற்பனைக்கு விடப்பட்டது.
- 1993 - இஸ்ரேலும் வத்திக்கானும் தூதரக உறவுகளை ஏற்படுத்தின.
- 1996 - அஸ்ஸாம் மாநிலத்தில் பயணிகள் தொடருந்து ஒன்றில் போடோ தீவிரவாதிகளால் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் 26 பேர் கொல்லப்பட்டனர்.
- 2004 - ஆர்ஜெண்டீனாவின் புவனஸ் அயரெஸ் நகரில் இரவு விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயினால் 194 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - ஸ்பெயினின் தலைநகர் மாட்ரிட் நகரில் அனைத்துலக விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 2 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - முன்னாள் ஈராக் அதிபர் சதாம் உசேன் தூக்கிலிடப்பட்டார்.
- 2006 - நடுக்கடலில் ஏற்பட்ட புயலில் 850 பயணிகளுடன் சென்ற செனோபதி நுசந்தாரா என்ற இந்தோனீசியக் கப்பல் கடலில் மூழ்கியது.
- 2006 - முல்லைத்தீவு மாவட்ட கத்தோலிக்க ஆலயத்தால், கடல்கோளால் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்கும் ஆண், பெண் விடுதிகள் மீதும் பொதுமக்கள் வீடுகள் மீதும் விமானத் தாக்குதல் நடைபெற்றதில் ஐந்து சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

பிறப்புகள்

- 1865 - ரூடியார்ட் கிப்ளிங், இந்தியாவில் பிறந்த பிரித்தானிய எழுத்தாளர், கவிஞர், நோபல் விருதாளர். (இ. 1936)
- 1879 - இரமண மகரிஷி, தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதி. (இ. 1950)
- 1975 - டைகர் வூட்ஸ், கோல்ஃப் விளையாட்டு வீரர்.
- 1984 - லெப்ரான் ஜேம்ஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

இறப்புகள்

- 1691 - ராபர்ட் பொயில், அறிவியலாளர். (பி.1627)
- 1789 - இராயரகுநாத தொண்டைமான், புதுக்கோட்டை சமஸ்தான மன்னர். (பி. 1738)
- 1944 - ரொமாயின் ரோலாண்ட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர். (பி. 1866)
- 1947 - ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலர். (பி. 1861)
- 1968 - ட்றிகுவே லீ, நோர்வேயின் அரசியல்வாதி. (பி. 1896)
- 1988 - இசாமு நொகுச்சி, சிற்ப, கட்டடக் கலைஞர். (பி. 1904)
- 2006 - சதாம் உசேன், முன்னாள் ஈராக் ஜனாதிபதி. (பி. 1937)
- 2013 - கோ. நம்மாழ்வார், இயற்கை ஆர்வலர். (பி. 1938)

சிறப்பு நாள்

- பிலிப்பீன்ஸ் - ரிசால் நாள். (1896)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 100 | 50 | 40 | 30 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 110 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 220 | 180 | 220 | 150 | 200 | 200 |
| தக்காளி | 150 | 120 | 110 | 100 | 130 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 | 70 | 60 | 60 |
| கோவா | 30 | 60 | 20 | 30 | 60 | 60 | 30 |
| கரட் | 80 | 60 | 90 | 80-140 | 90 | 160 | 100 |
| பூசணி | 60 | 40 | 35 | 50 | 50 | 60 | 50 |
| புடோல் | 80 | 40 | 50 | 80 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 120 | 80 | 80 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 200 | 280 | 240 | 240 | 350 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 100 | 60 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 160 | 100 | 150 | 200 | 130 | 120 | 150 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 50 | 60 | 60 | 120 | 60 |
| கறிமிளகாய் | 300 | 200 | 180 | 200 | 160 | 240 | 140 |
| முருங்கைக்காய் | 380 | — | 300 | 800-1000 | 400 | 400 | — |
| போஞ்சி | 160 | 160 | 110 | 140 | 110 | 130 | 60 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 20 | 30 | — | 40 | 30 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 30 | 30 | 20 | 50 | 30 |
| தேசிக்காய் | 250 | 300 | 250 | 300 | 300 | 500 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 50 | 20-40 | 50 | 35 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 250 | 300 | 250 | 300 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | 280 | — | 280 | 150 |
| முள்ளங்கி | 60 | 100 | 40 | 80 | 50 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 35 | 40 | 15 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 60 | 60 | 50 | 80 | 60 | 100 | 70 |

இறந்து போனவனின் செருப்புக்குக் காத்திருப்பவன் வெறுங்கால்களுடனே நடக்க வேண்டி வரும்.
-டெனிஷ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அட! தம்பி சுமந்திரன் உள்ளூர்த் தீர்ப்பை நம்பலாமோ?

எண்பத்தைந்து வயது முதியவர் ஒருவர் வாசிகசாலை ஒன்றில் பத்திரிகை பார்த்துவிட்டு ஒரு வெள்ளைத் தாளில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். எழுதுகின்ற அதேநேரம் அவரின் முணுமுணுப்பும் மெல்லக் கேட்கிறது.

பத்திரிகை வாசித்துவிட்டு இப்பெரியவர் எதை எழுதுகிறார் என்று நினைத்து சரி, ஒருக்கால் பார்த்துவிடலாம் என முடிவு செய்தேன். அந்த எழுத்து இப்படி இருந்தது.

தம்பி சுமந்திரனுக்கு வணக்கம். எனக்கு வயது எண்பத்தைந்து இனி நாங்கள் சருகுகள். இருந்தும் என் மனதில் பட்டதை எழுதுகிறேன். ஏற்புடையதாயின் ஏற்றுக்கொள்க.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் கொலை தொடர்பிலான விசாரணை முடிவில் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள், நிரபராதிகள் ஆகக் கருதப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இது தான் நடக்கும் என்று எனக்கு நன்கு தெரியும்.

எண்பது வயதும் எனது அனுபவமும் அப்படி ஒரு முடிவுக்கு என்னைக் கொண்டு வந்தது. ஆனாலும் ஓர் ஐயம்! எங்கட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளூர் விசாரணையில் திருப்தியடைவது போல தெரிவித்ததால சிலவேளை ரவிராஜ் படுகொலைக் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை கிடைத்து விடுமோ என்று திகைத்து மாறினேன்.

ஆனால் நடந்தது நான் முன்பு நினைத்து போலத் தான். அதுமட்டுமல்ல, திருகோணமலையில் நடந்த படுகொலை தொடர்பிலும் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் விடுதலை பெற்றனர்.

இவைமட்டுமல்ல, இதற்கு முன்பும் ஏகப்பட்ட விடயங்கள் எனக்குத் தெரியும். அவற்றையெல்லாம் எழுதுவதற்கு என் வயது இடந்தரவில்லை.

அதேநேரம் நல்லாட்சி என்றாலும் என் பாதுகாப்புப் பற்றி நான் கவனம் எடுக்காவிட்டால் வேறு யார் தான் கவனம் எடுப்பார்கள்? ஆகையால் அவற்றை விட்டு விடுகிறேன்.

இது ஒருபுறமிருக்க, தம்பி சுமந்திரன்! மேலும் அறிவது, நடந்து முடிந்த வன்னிப் பெருயுத்தம் தொடர்பில என்ன மகன் நடக்குது? சர்வதேச விசாரணை நடந்த முடிந்து விட்டது என்று தாங்கள் கூறியதாக பத்திரிகை மூலம் அறிந்தேன்.

நீங்கள் கூறியதை தம்பி மாவை வன்னிக்கூட்டம் ஒன்றில் வைத்து வழிமொழிந்தார்.

ஆனால் பலரும் சொல்கிறார்கள் சர்வதேச விசாரணை நடக்கவில்லை. சர்வதேச விசாரணைதான் தேவை என்று.

அட! காலன் அழைக்கின்ற நேரத்தில உமக்கேன் இந்த ஆய்வென்று தாங்கள் மனதுக்க நினைத்தாலும் பரவாயில்லை. என்ர இறுதிக் காலத்துக்குள் சர்வதேச விசாரணை நடந்து விட்டதா? அல்லது நடக்குமா? என்பதை அறிய வேண்டும் என்பதுதான் என் பெருவிருப்பம்.

சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்றால் அந்த விசாரணை எங்கே? அதற்கு நடந்தது என்ன? அல்லது வன்னி பெருநில யுத்தத்தின் போது எங்களைப் பாதுகாக்காத பரம்பொருள் போல சர்வதேச விசாரணையும் அருவத் திருமேனியாய் விறகில் தீ போல்; பாலில் நெய் போல்; சங்கில ஒலி போல; உள்ளதோ? யாமறியேன்.

அது சரி, ரவிராஜ் படுகொலை விசாரணையின் தீர்ப்புக்குப் பின்னரும் உள்ளூர்த் தீர்ப்பு உத்தமம் என்று தாங்கள் கருதுகிறீர்களா? என்பதையும் அறிய ஆவல்.

ஏனென்றால் உள்நாட்டுத் தீர்ப்பில் நம்பிக்கை உண்டு என்பது போல எங்கோ ஓரிடத்தில் தாங்கள் கூறியதாக ஞாபகம். பின்னர் அண்மையில் கரவெட்டியில் நடந்த நிகழ்வொன்றில், இலங்கையின் நீதித்துறை மீது நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளதென்று தாங்கள் உரையாற்றியதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன்.

அட தம்பி! எப்பதான் நாங்கள் உண்மையை உண்மையாக அறியப் போகிறோம். உண்மை ஒன்றுதான். இந்த ஓர் உண்மைக்குள் உண்மைதான் இருக்கும். உண்மை பற்றிக்கூறும் மற்றவை அனைத்தும் பொய்யாகும்.

ஏதோ எங்கட சனங்கள் பாவம் மகன்! நம்பி புள்ளடி போட்டவையள். ஏதோ பாத்து நடவுங்கள். என்ர நல்பன் சப்பந்தரை நலன் விசாரித்ததாகவும் கூறவும்.

# ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசி ஜனவரியில் இறக்குமதி

நாட்டில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் ஜனவரியில் வெளிநாடுகளிலிருந்து ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படுமென இராஜாங்க அமைசசர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன நேற்று முன்தினம் தெரிவித் தார்.

அரசாங்கத்தின் செலவி ன்றி முற்றும் முழுதாக தனியாரின் செலவுடன் இந்த அரிசி இறக்குமதி முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனவரி 4 ஆம் திகதி அரிசி இறக்குமதிக்கான உத்தியோகபூர்வ பணிகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் ஜனவரி 17 ஆம் திகதியளவில் இறக்குமதி பூர்த்தியடைந்து அரிசிக்கான தட்டுப்பாடு நிறைவடையும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் காலை நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"பொதுவாக எட்டு இலட்சம் ஹெக்டேயரில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியும். ஆனால் இம்முறை நிலவும் காலநிலை மாற்றம் காரணமாக 2 இலட்சத்து 45 ஆயிரம் ஹெக்டேயரில் மட்டுமே நெற்பயிர்ச் செய்கை இடம் பெற்றுள்ளது. வர்த்தக அமைச்சு ஜனவரி முதலாம் திகதி முதல் இதற்கான பணிகளை ஆரம்பிக்கும். பதிவுகள் முடிவடைந்ததும் ஜனவரி 4 ஆம் திகதி முதல் இறக்குமதி பணிகள் ஆரம்பமாகும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை அரிசி இறக்குமதிக்காக அரசாங்கம் ஒரு சதத்தையேனும் செலவு செய்யப் போவதில்லை. அனைத்தும் தனியாரினாலேயே முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். எனினும் அரிசி இறக்குமதி செய்யும் தனியார் நிறுவனங்கள் வர்த்தக அமைச்சில் இதற்கென நியமிக்கப்பட்ட விசேட குழு மற்றும் வாழ்க்கைச் செலவு குழு ஆகியவற்றினால் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரிசி இறக்குமதி செய்யப்படுவதனால் விவசாயிகள் எச்சந்தர்ப்பத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள். இறக்குமதி செய்யப்படும் இந்த அரிசி வர்த்தக அமைச்சு மற்றும் சுங்க அதிகாரிகள் ஆகிய இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடனேயே களஞ்சியசாலையிலிருந்து வெளியே எடுக்க முடியும் என்பதனால் விவசாயிகளுக்கு பாதிப்பு இடம்பெறாத வகையிலேயே குறித்த அரிசி விற்பனைக்கு விடப்படும் என்றும் தெரிவித்தார்.(இ-3)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### என்னுடைய அறிவில் (தலையில்) சிறிய அரக்கன் (குட்டி இராட்சசன்)

இந்த ஆணவத்தில் சிக்கல் இருக்கிறது. என்னுடைய அறிவில் (தலையில்) வாழும் இந்தச் சிறிய அரக்கன் என்னுடைய நல்ல குணாங்களுக்குப் பின்னால் பாதுங்கி, தொந்தரவு கொடுக்க வாய்ப்பிற்காக காத்துக் கொண்டிருக்கிறது. அது எப்போதும் சரியாக இருக்க விரும்புகிறது. சரியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதற்குப் பொருட்டல்ல. அது பகுத்தறிவு கொண்டு காரண விளக்கம் கேட்கும். அது சரியென்று மெய்ப்பிக்கும். அது நண்பர்கள், குடும்பம், மன அமைதி ஆகியவற்றிற்குத் துன்பம் விளைவிக்கும். வெற்றி கொள்ள தானே மேலாக இருப்பதற்காக.

இதை அறிந்துகொண்ட எனக்கு இப்பொழுது ஆதாயம் உள்ளது. இந்த ஆணவம்- மற்றவர்களிடம் சூழ்ச்சி செய்வது அல்லது ஒரு கெடுத்து வைக்கப்பட்டுள்ள குழந்தை போன்று நான் செய்வதையே அடுத்தவர் செய்வதற்கு அவரைக் கோபிப்பது சரியென்று என்னை வசப்படுத்த முயற்சிக்கும்போது அந்த நிலைமையைப் பார்த்து " ஹூம் இந்த ஆணவம் மறுபடியும் தன்னுடைய விளையாட்டை விளையாட இங்கே இருக்கிறது" என நினைக்கிறேன். ஆனால் அப்படிச் செய்ய நான் விழையும்போது மாத்திரமே.

எனக்கு தெரிவு உள்ளது என்பதுதான் விடை. இந்த ஆணவம் நான் வேறுவிதமாக எண்ணுவதையும் விரும்பும். வாழ்க்கை என்பது வெற்றி கொள்ள அல்லது தோற்க ஒரு போட்டி. நான் அதனுடைய தந்திரங்களைக் கண்டு சிரிப்பதற்குப் பதிலாக அதனுடைய முடிவற்ற தந்திரங்களுக்கு நான் எதிர்த்துச் செயலாற்றுவதை அது விரும்பும். அதனுடைய விளையாட்டுக்களை என்றும் நிலைத்திருக்கச் செய்ய விரும்பும். ஆனால் நான் ஞானத்தைப் பயன்படுத்தும்போது நான் கூர்ந்து கவனிக்கின்றேன். எதிர்த்துச் செயலாற்றல் மற்றும் பழிவாங்கலுக்குப் பதிலாக மன்னிக்கின்றேன்; அப்போது பாதிக்கப்படாமல் பயமின்றி நான் சந்திக்கும் சூழ்நிலைகளை இலகுவாகக் கடந்து வருகிறேன்.

"சரி" மற்றும் "தவறு" என்பவை மனதில் உள்ள கருத்துக்கள் எது முக்கியம் என்றால் என்னுடைய இதயத்தில் உள்ள அன்பு. இந்த ஞானத்தோடு, நான் சுதந்திரமாக இருக்கிறேன்.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நல்ல பெயர் வையுங்கள்

❖ குறைந்த செலவில் அமையப் பெற்ற திருமணமே இறையருளை அள்ளித் தருவதாகும்.

❖ யார் எனது நாற்பது மொழிகளை (உலகில்) போதித்துவிட்டு மரணிப்பாரோ அவர் சொர்க்கப் பூங்காவில் எனது தோழராகிவிடுவார்.


❖ பெண்களை நல்ல முறையில் நடத்துமாறு அல்லாஹ் கட்டளையிடுகின்றான்! எனென்றால் அவர்களே உங்களின் தாயாராகவும், மகளாகவும், மாமியாராகவும் இருக்கின்றனர்.

❖ நீங்கள் கற்புடையவர்களாக இருங்கள், உங்கள் மனைவியரும் கற்புடையவர்களாக இருப்பார்கள்.

❖ மறுமையில் உங்கள் பெயரைக் கொண்டும் உங்கள் தந்தையின் பெயரைக் கொண்டும் நீங்கள் அழைக்கப்படுவீர்கள். எனவே உங்கள் குழந்தைகளுக்கு நல்ல பெயரை வையுங்கள்.

❖ பெண் குழந்தையை விட ஆண் குழந்தைக்கு முதன்மை அந்தஸ்து கொடுக்காமலிருக்கும் ஒருவரை நிச்சயம் அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைய வைப்பான்.

❖ எவர் மரணித்துவிட்ட குழந்தையின் தாயிடம் சென்று ஆறுதல் கூறுகிறாரோ. அவருக்கு சொர்க்கத்தின் போர்வையை போர்த்தப்படும். -நபிகள் நாயகம்



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பெண்கள் ருத்ராட்சம் அணியலாமா?

ருத்திரன் என்ற பெயரில் இருந்து வந்ததே ருத்திராட்சம் ஆகும். சிவபெருமானின் முக்கண்களிலிருந்தும் தெறித்த ஆனந்தக் கண்ணீர் சொட்டுகளே ருத்திராட்சங்களாகின. மொத்தம் முப்பத்தெட்டு விதமான ருத்திராட்சங்கள் தோன்றின.வலது கண்ணிலிருந்து மஞ்சள் நிற ருத்திராட்சங்கள் பன்னிரெண்டும். இடது கண்ணில் இருந்து பதினாறு வெண்ணிற ருத்திராட்சங்களும் தோன்றின. நெற்றிக் கண்ணிலிருந்து கறுப்பு வண்ணத்தில் பத்து ருத்திராட்சங்கள் வெளிப்பட்டன. ருத்திராட்சத்தை மனிதர்கள் அனைவரும் அணியலாம். ஆனால் இதனை அணிந்தவர்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

தீட்டு இடங்களுக்கோ, இல்லத்திற்கோ செல்லக்கூடாது. தீட்டு ஆனவர் கைகளால் உணவு அருந்தக் கூடாது. அப்படி ஏதேனும் அறியாமல் நடந்து விட்டால் ருத்ராட்சத்தை தூய்மை செய்து பின்பு அணிந்தால் நன்மை தரும் மேலும், பெண்கள் ருத்திராட்சம் அணிந்திருந்தால் இரவில் கழற்றி பூஜை அறையில் வைத்துவிட்டு காலை எழுந்து குளித்து விட்டு அணிய வேண்டும், மாதவிடாய் காலங்களில் இதனை கண்டிப்பாக தொடுதல் கூடாது.

கல்வியை சிறந்த முறையில் பயில்வார்கள். ருத்திராட்சங்கள் ஒரு முகம் முதல் 16 முகம் வரை கொண்ட பதினாறு வகை உண்டு. இதன் மேல் உள்ள கோட்டின் எண்ணிக்கையைக் கொண்டு ருத்திராட்சம் எத்தனை முகம் கொண்டது என்பதை அறியலாம். ருத்ராட்சம் செயற்கை பொருளாகவும் கிடைக்கிறது. இதனை அணிந்தால் பலன் கிடைக்காது. இயற்கை பொருளாக இருந்தால் மட்டுமே ஆன்மீக பயன் மற்றும் மருத்துவ பயன், ஜோதிட பயன்களையும் தரும்.

மேலும், குறிப்பிட்ட முகம் கொண்ட ருத்ராட்சங்களை இடது கையால் தொடவும், எடுக்கவும் கூடாது. அதே போல ஜெப ருத்ராட்ச மாலைகளை பிறர் தொடவும் அனுமதிக்க கூடாது. பிறருக்கு தரவும் கூடாது. ஜெபம் செய்யும் ருத்ராட்ச மாலைகளை கழுத்தில் அணிய கூடாது. கழுத்தில் அணியும் ருத்ராட்ச மாலையை ஜெபம் செயய பயனபடுததக கூடாது.

(தொடரும்)

# யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணம்

## சென்றலைட்ஸ் முதலிடம்







யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 7 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவினை யாழ்.சென்றல் கழகத்தில் 16 ஆவது அகவையில் (30.12.2016) வெளியிட்டுள்ளனர். சென்றலைட்ஸ் அணி 24 போட்டிகளில் பங்குபற்றி 18 போட்டிகளில் வெற்றி பெற்று 161.74 புள்ளிகளினை பெற்று 1 ஆம் இடத்திலும் (தொடர்ந்து 3 வருடங்கள்) கே.சி.சி.சி. அணி 23 போட்டிகளில் பங்குபற்றி 17 போட்டிகளில் வெற்றி பெற்று 140.34 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும் யாழ்.ஜொனி ன்ஸ் அணி 21 போட்டிகளில் பங்குபற்றி 15 போட்டிகளில் வெற்றி பெற்று 116.29 புள்ளிகளினை பெற்று 3 ஆம் இடத்திலுமுள்ளனர். ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு,

திருநெல்வேலி சி.சி. 113.13 (23/16), (5) மானிப்பாய் பரீஸ் 98.55 (22/12), (6) யாழ்.பல்கலைக்கழகம் 93.73(16/10), (7) ஜொலிஸ்ரார் 90.96 (22/10), (8) கிராஸ்கொப்பர்ஸ் 59.30 (13/06), (9) ஓல்ட் கோல்ஸ் 57.68 (10/05), (10) யாழ்.சென்றல் 52.31 (13/06), (11) பற்றீசியன்ஸ் 47.91 (14/06), (12) சிறிகாமாட்சி 44.82 (11/05), (13) ஸ்கந்தாஸ்ரார் 44.54 (13/05), (14) ஜ"னியன் 34.78 (12/02), (15) ஹாட்லியைற்ஸ் 34.42 (09/04), (16) ஸ்ரான்லி 31.90 (10/03), (17) டிறிபேக்ஸ்ரார் 29.17 (07/04), (18) விக்டோறி 28.49 (09/03), (19) அரியாலை சென்றல் 27.63 (10/03), (20) விங்ஸ் 22.37 (06/01), (21) திருநெல்வேலி YMHA 18.13 (08/00), (22) நியூஸ்ரார் 17.88 (07/01), (23) றெயின்போ 7.82 (04/01), (24) யவ்ஸ்ரார் 6.73 (04/00)

20 ஓவர் போட்டிகளில் ஜொலிஸ்ரார் அணி 12 போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று முதலாம் இடத்தையும் 30 ஓவர் போட்டிகளில் கே.சி.சி.சி. அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றி பெற்று 37.59 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்திலும் 40 ஓவர் போட்டிகளில் கே.சி.சி.சி. அணி 2 போட்டிகளில் பங்குபற்றி 2 இலும் வெற்றி பெற்று 14.62 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும் 50 ஓவர் போட்டிகளில் சென்றலைட்ஸ் அணி 12 போட்டிகளில் பங்குபற்றி 09 போட்டிகளில் வெற்றி பெற்று 89.49 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்திலும் உள் ளன்ர்.

மேற்படி நிகழ்வில் கடந்த 6 வருடங்களில் யரழ்.பல்கலைக்கழக அணி 2010, 2011 ஆம் ஆண்டுகளில் கே.சி.சி.சி. அணி 2012 ஆம் ஆண்டிலும் யாழ்.ஜொனி யன்ஸ் அணி 2013 ஆம் ஆண் டிலும் யாழ்.சென்றலைட்ஸ் அணி 2014, 2015 ஆம் ஆண்டிலும் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# தெற்காசிய நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற 20 வயதுப்பிரிவினருக்கான பளுதூக்கும் போட்டி

## வயாவிளான் மத்திய கல்லூர்ரி மாணவிகள் சாதனை



தேசிய ரீதியில் இதுவரை காலமும் பளுதூக்கலில் சாதனை படைத்து வந்த வயாவிளான் மத்திய கல்லூாரி மாணவிகள் சர்வதேச ரீதியிலும் தமது பதக்க வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.

தெற்காசிய நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற 20 வயதுப் பிரிவினருக்கான பளுதூக்கும் போட்டி 26.12.2016 அன்று மலேசியா கோலாலம்பூர் நகரில் நடைபெற்றது.

இதில் 53 கிலோகிராம் எடைப் பிரிவில் பங்குபற்றி தேவராசா லயன்சிகா 90 கிலோ கிராம் எடையினைத் தூக்கி வெண்கலப்பதக்கத்தினையும் 70 கிலோ கிராம் எடைப்பிரிவில் பங்குபற்றி குகசீலன் றெஜினா 93 கிலோ கிராம் எடையினைத்தூக்கி வெள்ளிப்பதக்கத்தினையும் வென்றனர்.

இவர்களுக்கான பயிற்றுவிப்பாளராக எஸ்.ஹரிகரனும் பொறுப்பாசிரியராக இப் பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியரும் பழைய மாணவருமான கே.பகீரதன் ஆகியோர் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# தபேந்திரம் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுத்தொடர்

குரும்பை கட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் அமரர் தபேந்திரம் ஞாபகார்த்தமாக நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அரை இறுதிக்கு தெரிவு செய்யப்பட்ட UK (A) வி.க. தனது முதலாவது போட்டியில் அல்வாய் நியூபவர் வி.கழகத்தையும் இரண்டாவது போட்டியில் இமையாணன் இளைஞர் வி.கழகத்தையும் வெற்றி பெற்று அதிரடியாக அரைஇறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

மேலும் UK (B) வி.கழகம் முதலாவது போட்டியில் வல்லியானந்தா வி.கழகத்தையும் இரண்டாவது போட்டியில் உதயதாரகை வி.கழகத்தையும் வெற்றி பெற்று மூன்றாவது போட்டியில் வெண்மதி வி.கழகத்தையும் வெற்றி பெற்று அரை இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

Sports
விளையாட்டுச் செய்திகள்


# சிவகுமரன் வி.கழகம் அரையிறுதிக்கு தகுதி



குரும்பை கட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் அமரர் தபேந்திரம் ஞாபகார்த்தமாக நடத்தும் கரப் பந்தாட்ட சுற்றுப்போட்டியில் நான்காவது அரையிறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட சிவகுமரன் வி.கழகம் தனது முதலாவது போட்டியில் வெள்ளிருவை ஞானவைரவர் B வி.க. வெற்றி பெற்று இரண்டாவது போட்டியில் பலம் வாய்ந்த மாதனை A வி.கழகத்தினையும் வெற்றி பெற்று அரையிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

# வென்று இரண்டாமிடத்துக்குச் சென்றது லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டி யொன்றில் வெற்றிபெற்ற லிவர்பூல், பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசை யில் இரண்டாமிடத்துக்கு முன்னேறியது.



லிவர்பூல், 4-1 என்ற கோல் கணக்கில் ஸ்டோக் சிற்றியைத் தோற்கடித்து, பிறீமியர் லீக்கில், தமது அன்பீல்ட் மைதானத்தில் தோற்கடிக்கப்பட முடியாத அணியாக இப்பருவகாலத்தில் தொடர்கிறது. லிவர்பூலின் பின்கள தடுமாற்றத்தை வெளிப்படுத்தும் முகமாக ஸ்டோக் சிற்றியின் ஜோன் வோல்ட்டேர்ஸ், போட்டியின் 12ஆவது நிமிடத்தில் தலையால் முட்டி கோலொன்றைப் பெற்று தனது அணிக்கு முன்னிலையை வழங்கினார்.

அதன்பின்னர், ஸ்டோக் சிற்றியின் கோல் கம்ப எல்லையிலிருந்து ஆறு யார் தூரத்திலுள்ள பெட்டிக் குள், முன்னாள் லிவர்பூல் வீரரான கிளென் ஜோன்சன் பந்தொன்றை வெளியேறத் தவற, போட்டியின் 34ஆவது நிமிடத்தில் அடம் லலானா பெற்ற கோலின் மூலம் கோல் எண்ணிக்கையை லிவர்பூல் சமப்படுத்தியது. அதன்பின்னர், போட்டியின் முதற்பாதி முடிவடைய, எவராலும் கவனிக்கப்படாமல் இருந்த றொபேர்ட்டோ பேர்மினோ பெற்ற கோலின் மூலம் 2-1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் முன்னிலை பெற்றது.

பின்னர், போட்டியின் இரண்டாவது பாதியில், டிவோக் ஓரிஜியின் உதையை, தமது கோல்கம்பத்துக் குள்ளேயே ஜியனனெல்லி இம்புலா புகுத்த, 3-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்ற லிவர்பூல், போட்டியின் 70ஆவது நிமிடத்தில், இப்பருவகாலத்தில் தனது முதலாவது கோலை டேனியல் ஸ்டரிட்ஜ் பெற்றதோடு, 4-1 என்ற கோல் கணக்கில் இறுதியில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 40 புள்ளிகளைப் பெற்று, பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் இரண்டாமிடத்தில் உள்ள லிவர்பூல், முதலாமிடத்திலுள்ள செல்சியை விட ஆறு புள்ளிகள் குறைவாகப் பெற்றுள்ளது. லிவர்பூலை விட ஒரு புள்ளி குறைவாகப் பெற்றுள்ள மன்செஸ்டர் சிற்றி மூன்றாமிடத்தில் உள்ளது.

## குறைபாடுடைய...

வெளியிட்ட அக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க அபிவிருத்திக்கான் விசேட சட்டமூலம் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்கெடுப்பின்றி விசேட அதிகாரங்களை கொண்ட அமைச்சர் ஒருவரை நியமிப்பது தொடர்பிலான சட்டமூலத்தை நிறைவேற்றிக கொள்வது தொடர்பில் இரண்டு பிரதான கட்சிகளும் முதலில் இணக்கத்திற்கு வந்திருந்தன. விசேடமாக இவ்வாறான ஒரு பிரேரணை தொடர்பில் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை.

அபிவிருத்திக்கான விசேட சட்டமூலம் அவசியம் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதற்கான அவசியம் உணரப்பட்டுள்ளது. இதனை நாங்கள் நிராகரிக்கவில்லை. எனினும் குறைபாடுகள் காணப்படுமாயின், மாற்றங்கள் இருக்கமாயின், அது தொடர்பில் பேசி தீர்மானிக்க முடியும். அதனைவிடுத்து அமைச்சரவையில் இது தொடர்பில் தீர்மானித்து சட்டமூலத்தை வெளியிட்டதன் பின்னர் அதற்கு இணங்கமுடியாது என பின்னர் தெரிவிக்கின்றனர்.

ஒரு மாகாண சபையில் இந்த சட்டமூலம் தோல்வியடைந்தவுடன் அது தொடர்பில் அவதானம் செலுத்தி அதன் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, புதிய சட்டமூலத்தை மாகாண சபைகளுக்கு அனுப்பியிருக்க முடியும். மாகாண முதலமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிரதமர் இதில் குறைபாடு இருப்பதை ஏற்றுக்கொண்டார். அவ்வாறிருக்கையில் ஏன் மீண்டும் மீண்டும் மாகாண சபைகளின் விருப்பத்தை அறிந்துகொள்வதற்காக அதனை ஏன் அனுப்புகிறார்கள்?

இதிலிருந்து அரசியல் ரீதியிலான குழப்பங்கள் காணப்படுவது தெளிவாகிறது. அத்தோடு இவ்வாறான அரசியல் பிரச்சினைகளை சமாளிக்க ஒரு அவசியமான சட்ட மூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான அரசியல் சூழ்நிலையும், பொறுப்பும் காணப்படுகின்றாதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது என நிசாந்தசிறி வர்ணசிங்க குறிப்பிட்டார். (செ-11)

## சர்வதேச அரங்...

மக்கள் சக்தி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான சமன் இரத்தினபிரிய கருத்துத் தெரிவிக்கையில், 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி ஆட்சி மாற்றத்தின் மூலம் மக்கள் முன்வைத்த எதிர்பார்ப்புக்கள் ஒவ்வொன்றாக மீறப்பட்டுவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை தொடர்பான வழக்கின் நீதிமன்றத் தீர்ப்புடன் கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான விசாரணைகளுக்கு என்ன நடக்கும் என்பது தொடர்பிலும், இந்தப் படுகொலைகளை நிகழ்த்திய கொலையாளிகள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படுவார்களா, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்குமா போன்ற விடயங்களில் பாரதூரமான கேள்விகள் எழுந்துள்ளன.

முடக்கப்பட்டிருந்த ரவிராஜ் படுகொலை குறித்த விசாரணைகள் ஆட்சிமாற்றத்தை அடுத்து பொலிஸாரினால் துரிதப்படுத்தப்பட்டிருந்தன.

இதன்போது ரவிராஜின் கொலையை நேரில் கண்ட சாட்சிகூட வெளியே வந்தது. ஈற்றில் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளால் ஜூரி சபை கோரப்பட்டதையடுத்து ஜூரி சபை நியமிக்கப்பட்டது. அப்படி நியமிக்கப்பட்ட ஜூரி சபையானது கடைசியாக அளிக்கப்பட்ட சாட்சியின் அடிப்படையில் அதுவரையில் நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தவர்களையும் சந்தேகத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தவர்களையும் விடுதலை செய்வதற்கு ஏகமனதாக தீர்மானித்தது.

நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பாக எமக்கு பிரச்சினையில்லை. ஏனெனில் ஜூரி சபையின் தீர்ப்பை நீதிமன்றம் அறிவித்திருந்தது. ஆனால் இதனை தெளிவாக படுகொலை என நிரூபிக்கப்பட்டிருக்கும் நிலையில் இப்படியான தீர்ப்பின் மூலம் படுகொலைக்கு உள்ளாகியவர்களின் குடும்பத்தினருக்கு நீதிகிடைக்குமா என்ற விடயம் தொடர்பில் எமக்கு கேள்வி இருக்கின்றது.

அது முதலாவது கேள்வி. அது அப்படி நடக்கப்போவதில்லை. எமக்கு இருக்கின்ற இரண்டாவது கேள்வியாதென்றால் படுகொலைகளுக்கு எதிராகவும், ஊழலுக்கு எதிராகவும் செயற்படுவோம் என தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தது. கொலையாளிகளையும் ஊழல் பேர்வழிகளையும் கைதுசெய்வதாக வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது.

அந்த உறுதிமொழியை நிறைவேற்றத் தவறுகின்ற விடயமானது ரவிராஜ் படுகொலைச் சந்தேக நபர்களை விடுதலைசெய்ததன் மூலமாக கணிசமான ரீதியில் நிரூபணமாகியுள்ளது. இதன் மூலம் மக்களின் நம்பிக்கை குலைந்துபோவதை நிறுத்தமுடியாது போகும். இதனால் நாட்டிற்குள் மட்டுமன்றி சர்வதேசத்திலும் இது தொடர்பாக கேள்வி எழும் என்றார்.

அத்தோடு ரவிராஜ் படுகொலை தீர்ப்பு உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ள சமன் இரத்னப்பிரிய, குறிப்பாக போர்க் குற்றங்கள் தொடர்பான கடந்த ஆட்சியின் போது தெரிவிக்கப்பட்ட மின்சாரக் கதிரை அச்சம் மீண்டும் எழலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## முட்டாள் தயாரி...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்திகள் விசேட ஏற்பாடுகள் சட்டமூல வரையை கொண்டு வரும் முன்னர் நாட்டுக்குள் அது தொடர்பாக வாதவிவாதங்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அத்துடன் மாகாண சபைகளின் யோசனைகளை பெற்று தவறுகளை திருத்தி சட்டமூலத்தை முன்வைத்திருக்கலாம்.

மாகாண சபைகளின் உதவி தேவையாக இருந்தால் முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பம் இருந்தது.

இதனை நாடாளுமன்றத்தில் முதலில் சமர்ப்பிக்கக் கூடாது என்பதே எனது நிலைப்பாடு. அமைச்சூர் நேர்மையான நிலைமையில் செயற்பட்டால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என சட்டமூல வரையில் கூறப்பட்டுள்ளது.

நான் இதனை எதிர்க்கின்றேன். ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடிந்த நிலையில் அமைச்சர் ஒருவருக்கு எப்படி இப்படியான சட்ட வசதியை வழங்க முடியும்.

இந்த சட்டமூலத்தின் ஊடாக குழுக்களை நியமித்தது பயனில்லை. திட்டங்களை செயற்படுத்த வேண்டும்..

இலங்கையை முதலீட்டுக்கு உகந்த நாடாக மாற்ற வேண்டும். அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டம் அத்தியாவசியமான ஒன்று.

மேலும் அபிவிருத்தித்திட்டங்கள் ஓரிடத்தில் இருந்து செயற்படுத்தப்பட வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. இதனால், சட்டமூல வரைபு தொடர்பாக மீண்டும் கலந்துரையாடி அதனை முன்வைக்க வேண்டும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். (இ-3)

## ஆட்சியை கவிழ்ப்ப...

கொழும்பிலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களை நேற்றுச் சந்தித்த சந்தர்ப்பத்திலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றத்திற்குள் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்பட்ட போதிலும், தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து ஆராயும் போது எதிர்காலத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். 2017 ஆம் ஆண்டில் நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதே எனது முக்கிய திட்டமாக உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆகியவற்றுக்கு இடையில் தற்போது முறுகல் நிலைமை காணப்படுகிறது. இவ்வாறான சூழலுடன் நாடொன்று முன்னோக்கி செல்ல முடியாது. எனவே சிறந்ததொரு மாற்றம் ஏற்பட வேண்டும் என்றார்.

இதன்போது 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம், இரண்டு தடவைகள் மாத்திரமே ஜனாதிபதியாக ஒருவர் அதிகாரத்தில் இருக்க முடியும் என்ற வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளமையினால், முன்னாள் ஜனாதிபதியாக நீங்கள் மீண்டும் அரசத் தலைவராக (ஜனாதிபதி) முடியாதா என சர்வதேச ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீளவும் ஜனாதிபதியாகும் எண்ணம் தனக்கு கிடையாது என கூறியுள்ளதுடன், ஜனாதிபதி ஆகாமலேயே எனக்கு இந்த நாட்டை மீண்டும் ஆட்சி செய்யும் திறன் உண்டு எனவும் நம்பிக்கையாக பதில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் பிரதமர் பதவியொன்று வழங்கப்படும் பட்சத்தில், ஜனாதிபதியுடன் இணைந்து கடமையாற்ற தயாரா என மற்றொரு ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு, தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் அந்த செயற்பாட்டை செய்ய முடியும் என்றால், 1970ஆம் ஆண்டு தொடக்கம் நன்றாக தெரிந்த ஒருவருடன் இணைந்து என்னால் கடமையாற்ற முடியாத என மகிந்த பதிலளித்துள்ளதுடன், அவ்வாறான நிலைமையொன்று உருவாகும் பட்சத்தில், அது தனது நிபந்தனைகளின் பிரகாரமே இடம்பெற வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தொடர்பிலும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் இடம்பெறுகின்ற விதம் தொடர்பாக மாத்திரமன்றி, அரசியலமைப்பின் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும் அவர்கள் தன்னுடன் கலந்துரையாடவில்லை என மகிந்த குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு அரசியலமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றமையானது, தனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

மேலும், யுத்த வெற்றிக்காக இந்தியா, இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளதாக முன்னாள் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் தெரிவித்த கருத்து குறித்தும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளனர்.

யுத்த வெற்றிக்காக இந்தியா உதவிகளை வழங்கியுள்ளதாக தான் ஏற்கெனவே கூறியிருந்ததாக இதன்போது குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி, தமிழ் நாட்டில் காணப்படுகின்ற பிரச்சினை காரணமாக, அதனை வெளிப்படுத்துவதற்கு இந்தியாவிற்கு தேவை காணப்படவில்லை எனவும் கூறியுள்ளார்.

இந்தியா, இலங்கைக்கு உதவிகளை வழங்கும் நிலைப்பாட்டில் இருந்த நிலையில், அந்த நிலைப்பாட்டில் திடீரென மாற்றம் ஏற்பட்டமைக்கான காரணம் என்னவென ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளனர்.

சில தவறுகளை புரிந்துக்கொண்டிருந்தமை மாத்திரமன்றி, அமெரிக்காவின் அழுத்தமும் அதற்கான காரணமாக அமைந்திருக்கலாம்.

இந்தியா, அமெரிக்கா, இந்தியாவின் புலனாய்வு துறையான "ரோ" மற்றும் மேற்குலக நாடுகளின் தலையீடுகள் காரணமாக, அந்த தேர்தல் பிரசார செயற்பாடுகளுக்கு தன்னால் தலையீடு செய்ய முடியாது போனதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## 'அரசியலமைப்...

அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது நாட்டில் பேசுபொருளாக மாறியுள்ள அரசியல் யாப்பு திருத்தத்தின் ஊடாக நாட்டை பிளவடையச் செய்யும் அதேவேளை நாட்டின் வளத்தை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு எதிராக நாம் ஒரு வேலைத்திட்டத்தை உடனடியாக செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

சிவில்அமைப்புகள், பௌத்தர்கள்-சிங்களவர்கள் அல்லாதவர்களின் ஆலோசனைக்கு அமைய செயற்படும் நாட்டின் தற்போதைய தலைவர்களினால் யாப்பின் ஊடாக ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமாயின் அதற்கு எதிராக ஒப்பந்தங்கள் எதுவுமின்றி எவரோடு வேண்டுமானாலும் இணைந்து அதனை தோற்கடிக்க நாம் தயாராக வேண்டும்.

நாட்டின் வளங்கள் விற்பனை செய்யப்படுவதற்கும் நாட்டை யாப்பின் ஊடாக பிரிப்பதற்கும் எதிராக சமூக வளைத்தளங்கள் ஊடாக போராட வேண்டும். ஆகவே ஜனவரி 7ஆம் திகதி அனைவரும் நுகேகொடையில் ஒன்றிணையுமாறு வேண்டுகிறோம் என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (செ-11)

## மைத்திரி-ரணில்...

தீவிர ஆதரவாளரான அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

நாடு செல்லும் திசையை கண்டு நானும் எமது தரப்பினரும் அமைதியான நிலைப்பாட்டை கடைப்பிடிப்போம் என்றால், அது நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் பெரிய அநியாயம்.

அரசாங்கத்தை கொண்டு நடத்த தகுதியற்றவர்கள் சிலர் நாடாளுமன்றத்திற்குள் புகுந்து நாளுக்கு நாள் நாட்டை அதளபாதாளத்திற்குள் தள்ள முயற்சித்து வருகின்றனர். நாட்டை விற்பது என்பது அரசாங்கம் எண்ணியது போல் இலகுவானதாக இருக்காது.

மக்களுக்கு அநீதி ஏற்படும் வகையில், அரசாங்கம் திரைமறைவில் செய்து வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போதுள்ள அரசாங்கம் மஞ்சள் கடவைகளை வெள்ளையாக மாற்றியதையும் பழிவாங்களையும் மாத்திரமே செய்துள்ளது. மைத்திரியும் ரணிலும் மேற்கொண்டு வரும் இந்த அரசியல் நாடகத்தை உடனே நிறுத்த வேண்டும்.

நாட்டை விற்கும் அரசாங்கம் கொண்டு வரவுள்ள சமஷ்டி அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்த்து 10 ஆயிரம் பேரை நாடாளு மன்றத்திற்கு எதிரில் கொண்டு வரவுள்ளதாகவும் முருத்தொட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## கருமபீடம் மூடப்படும்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்திலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வெளிநாடு செல்வோரை பதிவு செய்யும் கருமபீடம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு செல்லும் இலங்கையர், தங்களை பதிவு செய்யும் பொருட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமையகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் குறித்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கை காரணமாக குறித்த கருமபீடம் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ-3)

## ஜனாதிபதி-ஐ.தே.க...

நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய கட்சி மீது கடுமையான விமர்சனங்களை முன்வைப்பதாக ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டு வருவதாக அண்மையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், மேற்படி விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவர ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இது குறித்து ஜனாதிபதியிடம் விடுத்து கோரிக்கைக்கு அமைய இன்று பிற்பகல் 4 மணியளவில் இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550/=Kg
DELIVERY IN 3-5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-6845)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
021 221 5656
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

## விமல் வீரவன்ச...

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய வாக்குமூலமொன்றை பெறுவதற்காக அவருக்கு அழைப்பாணை அனுப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வாக்குமூலம் வழங்கு வதை விமல் வீரவன்ச தொடர்ந்தும் தவிர்த்து வருவதாக பொலிஸ் நிதிக் குற்றப் பிரிவினால் கடந்த 16 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றைய தினமும் விமல் வீரவன்ச ஐந்து மணிநேர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். (செ-11)

## ஆதரவளிக்க...

யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில், நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்வதற்கு அரசியலமைப்பு ஊடாக தீர்வு பெற்றுக்கொடுப்பதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது. இன்னும் அது உறுதிப்படுத்தப்பட வில்லை. இவ்வாறான நிலையில், அரசாங்கம் அரசியல பிரச்சினையை தீர்த்ததன் பின்னர்தான் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் அரசியலமைப்பில் அதுதொடர்பான உறுதியான தீர்மானங்கள் இருக்கவேண்டும் என்றார். (செ-11)

NEC
①பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
②மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
A/L 2019
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு
K.பாலகஜன்
பொருளியல்
NB.கஜீதரன்
வணிகக்கல்வி
S.K.பாலசபேஷ்
பிரிவு 1 ஆரம்பம்
01/01/2017 Sun 9.00 A.M
T.P - 0774696695
(சி-6915)

NEC
தொழில்நுட்ப கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
A/L 2019
தொழில்நுட்ப பிரிவு
Science For Technology
■S.Uthis
(B.Sc MRT Spl.in.Water Science Technology)
Engineering Technology
■A.Arunraj
(B.Tec Spl.in.Mechatronics)
■K.Thivakar
(B.Tec Spl.in.Mechatronics)
■S.Uthis
(B.Sc MRT Spl.in Water Science Technology)
Bio Technology
■N.Dinojan
(B.Sc Spl.in Tec Technology and Value addition
R.Vikneswaran
ஆரம்பம்:-01/01/2017 Sun 9.00AM
(சி-6915)

உடனடி வேலைவாய்ப்பு
நல்லூரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பான்சி கடைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை நல்லூருக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. ஏனையோரும் தொடர்பு கொள்ளலாம்
தொடர்பு :-
0717794698
(7315)

NAC -மானிப்பாய்
A/L - 2019
கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பமாகிறது
ஆரம்பம்:-01.01.2017 (Sun 3 p.m)
குறிப்பு:-தொலைபேசி மூலம் அனுமதிகள் வழங்கப்படுகிறது.
0776947162
(7199)

BEACON
வெலிங்டன் சந்தி, யாழ் நகர்
A/L 2019
கலை, வர்த்தக, கணித விஞ்ஞான தொழில்நுட்ப
பிரிவு
ஆரம்பம்:-07.01.2017
காலை 9 மணி
(C-6910)

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ் நகர் (புகையிரத கடவை அருகில்)
A/L 2019
ஜனவரி 01 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
குறிப்பு:- ● ஜனவரி 31 வரை அனுமதிக் கட்டணம் இலவசம்
● தனித்துவமான ஆசிரியர் குழுவின் அர்ப்பணிப்பான வழிகாட்டல்
(C-7008)

Asian Baby needs
66/1, Main Street, Nelliady
புது வருடத்தை முன்னிட்டு அதி விசேட விலைக் கழிவு 50% மகப்பேற்றுப் பொருட்கள், தொட்டில், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள், கிறீம் வகைகள், சோப் அனைத்தும் 30/31ம் திகதிகளில் மட்டும்.
"அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்"
(சி-6913)

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ்நகர்
(புகையிரத கடவை அருகில்)
A/L 2019
வர்த்தகப் பிரிவு
Eco-R.தர்ஷன்
Acc-AP.பகீரதன்
B.St-S.யசோதரன்
Ict-R.நஜன்
ஆரம்பம்:-
ஜனவரி 01 ஞாயிறு
காலை 9 மணி
குறிப்பு:-
ஜனவரி 31 வரை
அனுமதிக்கட்டணம் இலவசம்
(சி-7010-)

"புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு"
ஞானோதய அக்கடமி
(சங்கத்தானை, சாவகச்சேரி)
A/L 2019 A/L DAY CLASS
■கலை ■வர்த்தகம் ■தொழில்நுட்பம்
ஆரம்பம்:-08.01.2017
ஞாயிறு காலை 9.00 மணி அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்
-நிர்வாகம்
(7314)

கணக்கீடு
AP.பகீரதன்
B.B.A(FMSpl) A/L 2019
ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ்.நகர்
(புகையிரத கடவை அருகில்)
ஆரம்பம் ஜனவரி 01
ஞாயிறு காலை 9 மணி

| VAI | IBS |
| --- | --- |
| பலாலி வீதி, கோண்டாவில் சந்தி. ஆரம்பம்:- ஜனவரி 02 திங்கள மாலை 5 மணி | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில் ஆரம்பம்:- ஜனவரி 07 சனிக்கிழமை மாலை 4 மணி |

■அனுமதிக் கட்டணம் இல்லை
■மாணவர் மீது தனிப்பட்ட கவனம்
தொடர்புகளுக்கு:-0774598499
(சி-7009)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள்
திருத்தம் விற்றல் வாங்குதல்
LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
(7312)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட் - யாழ்ப்பாணம்
கே.கே.எஸ்.றோட் - இணுவில்
(இரு இடத்திலும்)
A/L 2019
தொழில்நுட்பம், கலை, வர்த்தகம்
ஆரம்பம்-01.01.2017 ஞாயிற்றுக்கிழமை
யாழ்.நகரில் அனைத்துப் பிரிவுகளும் 8.00A.M
இணுவிலில் - வர்த்தகப்பிரிவு,
தொழில்நுட்பப் பிரிவு 2.00 P.M
கலைப்பிரிவு 8.00 A.M
உங்கள் அனுமதிகளை இரு இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்
NOTE - எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணியில் இதே திகதியில் ஆரம்பமாகின்றது. இங்கும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
(சி-6914)

NEC
①பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
②மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
A/L 2019
கலைப் பிரிவு
(சி-6915)

| பாடம் | பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி | மணிக்கூட்டு வீதி யாழ்.நகர் |
| --- | --- | --- |
| தமிழ் | A.K.கீர்த்திராஜன் | T.S.குகன் |
| இந்துநாகரிகம் | T.ஶ்ரீஸ் | T.ஶ்ரீஸ் |
| அளவையியல் | P.கமல் | P.கமல் |
| அரசியல் | M.அசோக் | G.ஶ்ரீரஞ்சித் |
| புவியியல் | S.P.கரன் | S.சபரிதன் |
| பொருளியல் | NB.கஜீதரன் | NB.கஜீதரன் |
| நாட.அரங்கியலும் | K.கணேஸ் | K.கணேஸ் |
| வரலாறு | S.S.தாஸ் | S.S.தாஸ் |
| ஊடகக்கல்வி | V.நவநீதன் | V.நவநீதன் |
| ICT | T.தேவதர்ஷன் | T.தேவதர்ஷன் |
| விவசாயம் | R.விக்கி | R.விக்கி |
| கிறிஸ்தவம் | R.ஜோன்சன் | R.ஜோன்சன் |

ஆரம்பம்:-01.01.2017 SUN- 9.00 AM

ICT

| A/L 2019 | A/L 2018 |
| --- | --- |
| ஆரம்பம் : 01.01.2017 ஞாயிறு காலை 10.30 | ஆரம்பம் : 31.12.2016 சனி காலை 09.30 (அலகு 1 இல் இருந்து கற்பிக்கப்படும்) |

■ பல்லூடக நிகழ்த்துகை மூலமான கற்பித்தல்.
■ கற்றல் கையேடுகள், மாதிரி பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
■ ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சைகள் நடத்தப்படும்.
Evershine Education Center
No.123, Brown Road, Jaffna.
S.Gowsigan (B.Tech- Network Tech.)
0773784053
அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
(7176)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.